தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, ஆனி 13 (27-6-'59). சனிக்கிழமை | இதழ் 2

பாத்திரப் படைப்பு

பாத்திரம் என்றால் என்ன? "வந்தோம்! போனோம்!" எனக் கதையை ஒட்டிச்செல்லும் யந்திரமா? [சம்ப]வங்களில் சிக்கல் ஏற்படும் [போ]து தீர்த்து வைப்பதற்காகத் திடீரென்று முளைக்கும் உருவகமா? இல்லை! ஒரு குணத்திற்குச் சமைக்கப்படும் உடலும் உயிரும்தான் "பாத்திரம்" எனப்படும். தெளிவோடும், மனித இயல்போடும் நாடகத்தைச் சமைக்கமுடியாத நாடகாசிரியன், பாத்திரத்தின் குணத்தைக் கெடுத்துவிடுகிறான். இப்படிக் கெடுக்கப்பட்ட குணங்களையே, இதுவரையில் நாடகங்களிலும் படங்களிலும் கண்டு வந்திருப்பதால் சரியான பாத்திரப் படைப்பு என்ன என்பதில் தமிழ்மக்கள் ஐயப்[பா]டு கொண்டவர்[கள்] ஆகவே காட்சி[யளி]க்கிறார்கள்.

...ண்டவர்களை ...து ...பேராகப் ...டத்ததற்கு, ...ந குணங்கள் ...ணம். திரௌ...ஐவரை மணந்து ...ண்டதாகக் ...த சமைக்கப் ...ற்றதற்கு, அந்த ... குணங்களை சமாளிக்கவேண்டியது ஒரு...ர் என்கிற தத்துவம் காரணம். ...ரவர்கள் நூறுபேராக்கப் பெற்ற...து, தீய குணங்கள் நூறு என்று ...ரியர் எடுத்துக்கொண்டது கார... எந்த நேரத்திலும், எந்த ...யையும், வேடிக்கையாகச் சமா...க்கக்கூடிய குணம் ஒன்றிருக்க ...டியுமா? இருக்கமுடியும் என்ப...கு, கண்ணன் என்ற பாத்திரம் ...ன்று-பாரதத்தைத் தத்துவ வழி... விளக்க வருகிறவர்கள் இப்படிச் [சொ]ல்லுகிறார்கள்.

[ச]ராசரி மனித குணத்தைவிட ...லக்கப்பால் உயர்ந்த குணம் [இரா]மகாதை"யில் வரும் இராமன் தான். சராசரி மனிதனின் குணத்தை விட, பாதாளத்துக்கும் கீழே தாழ்ந்த குணம் "இராமகாதை"யில் வரும் இராவணன் குணம். முன்னது தர்மம்; பின்னது அதர்மம். இரண்டுக்கும் இடையிலே இழுபறிசண்டை—"இராம காதை"க்குத் தத்துவம் சொல்ல வருகிறவர்கள், இப்படிச் சொல்லுகிறார்கள்.

மேற்குறித்த இரண்டு கட்டுக் கதைகளிலும் கதைப் போக்கை விட்டு விட்டுக் குணப்போக்கைக் கவனியுங்கள். இரண்டிலும் பொதுவாகச் சொல்லப்பட்ட தத்துவங்கள, காவிய ஆசிரியர்களாலே தெளிவாக்கப்படவில்லை. ஒருவேளை விமர்சகனுடைய விளக்கமான அறிவு ஆசிரியருக்கு இல்லாமல் இருந்திருந்திருக்கலாம். ஆனால் இரண்டிலும் வரும் பாத்திரங்களை, பாத்திரங்கள்—அவற்றின் குணங்கள் என்று எடுத்துக்கொண்டு பார்ப்போமானால் சில உண்மைகளை நாம் காணமுடியும். மேலோட்டமாகப் படிக்கிறவர்களுக்கு, பாரதத்தில் பல இடங்கள் பேடிமையாகக் காட்சி யளிக்கும். துச்சாதனனால் துகிலுரியப்பட்ட திரௌபதி, "அச்சோ, தேவர்களே!" என்று அலறுகிறாள். எந்தக் காவிய நாயகிக்கும் இல்லாத வாய்ப்பு, அவளுக்கு ஐந்து கணவர்கள் கிடைத்தது. ஐவரும் எங்கோ கண்மறைவாக, தலைமறைவாக இருந்தார்களா என்றால் இல்லை! எதிரே நிற்கிறார்கள். தர்மன் தலைமையில், பீமன் முன்னிலையில், அர்ச்சுனனின் ஆசீர்வாதத்தோடு, நகுலனும் சகாதேவனும் கண்டு களிக்க திரௌபதி துகிலுரியப்படுகிறாள். காட்சியைக் கொண்டு பாத்திரத்தின் குணத்தை முழுக்கத் தீர்[மா]னிப்பதென்றால் இந்த ஐவரையும் சூடு சொரணையற்ற எருமைகள் என்று கூற வேண்டியது. ஆழ்ந்து சிந்திக்க முடியாத "கல்கி" ஆசிரியர் போன்றவர்கள், அப்படித்தான் முடிவு கட்டுவார்கள், ஆனால் மேற்குறித்த சம்பவத்தில் மேற்குறித்த பாத்திரங்களின் நிலை என்ன? தருமன் சூதாடினான்; அந்தச் சூதிலே பாஞ்சாலியையும் பணயம் வைத்தான்; அவளை இழந்தான். அவளை எவன் அடிமை கொண்டானோ. அவன் அவளை ஏதும் செய்யக்கூடிய உரிமை பெற்றவன். உயிரும் உணர்ச்சியுமற்ற பொருள்களை மட்டுமே பணயம் வைப்பதுதான் இயற்கை. தோட்டத்தை ஈடு வைத்து ஒருவன் இழந்தான் என்றால், அதை வெற்றி கொண்டவன் மரங்களில் உள்ள காய்களைப் பறிப்பான்; மரங்களை வெட்டி விறகாக்கிக்கொள்வான். தான் விரும்புகிற பயிரை அந்தத் தோட்டத்தில் விளைவிப்பான். எதை வேண்டுமானாலும் செய்வதற்கு அந்த அடிமைச் சாசனம் அவனுக்கு உரிமையளிக்கிறது. அடிமைகொள்ளப்பட்ட பாஞ்சாலியை, துச்சாதனன் துகிலுரிந்தாலும், கணவர்கள் முன்னிலையிலே கலந்தாலும் கூட அவர்கள் தடுப்பதற்கு நியாயமில்லை; தாங்கள் வீரர்கள் என்பதற்காக அவர்கள் தடுக்க முயன்றால், நியாயத்தின்மீது நம்பிக்கையற்றவர்களாக ஆவார்கள்; நல்ல பாத்திரங்களின் அடிப்படைப் பெருமையே அழிந்து போகும். அதனால் அவர்களை, கை கட்டிக் கொண்டு நிற்க வைத்தான் கவிஞன். அந்த இடத்திற்கு அவர்கள் அப்படி நின்றதுதான் நியாயம். பின் எங்கே அந்தப் பாத்திரங்களின் தவறு தோன்றுகிறது? தருமன் பாஞ்சாலியைப் பணயம் வைத்தானே, அங்கே! உத்தமன் என்று வர்ணிக்கப் பெற்ற தருமன் சூதாட்டத்தில் மனைவியை ஈடு வைத்தான் என்று கூறப்பட்ட சருக்கத்தில் கவிஞன் தவறு செய்தான்; தருமனின் குணத்தைக் கெடுத்தான். அங்கேதான் பாத்திரம் முரண்பட்டது. ஆனால் முரண்பட்ட நிலையை மீண்டும் முரண்பட வைக்காமல் "நாம்தானே ஈடுவைத்துத் தோற்றோம்! இனி நாம் என்ன செய்யமுடியும்?" என்று பின்

கண்ணதாசன்

— 12-ம் பக்கம்

வாயில் நுழையா இந்தி நம் வாசலில் நுழையுதே!

என்னும் கருமேகங் ...பட்டு, விழி இருந்தும் ...க் குருடர்களாக நாம் ...லத்து "ஆண்ட இனத்தின் ...வன் நீ; அலைகடலைத்தாண்டி ...ட்சியை நிலைநிறுத்தியவன் நீ; ...கத்தின் உச்சநிலையை நாடு ...றிய காலத்தே கண்டவன் நீ" ...நம கொல்லா... எழுச்சியூ டி ...றைத்தினம் சென்னை காப்ப... ...ர் கட்டத்திற்கு நல்லதொரு ... ... கொடுத்ததற்குக் ...மாய இந் சமுதாய மறு மல...சி என்னும் பணியை அறிவியக் கம் ஒன்றுதான் அன்றே செய்தது. வைதீக வெறிகொண்டோரின் வயற் றெறிச்சல் ஒருபுறம், சர்வேசுவரன் சந்ததியார்களின் சீற்றம் மற்றொரு புறம், பெற்றோர் உற்றோர் மற்றோ ரின் பெருத்த எதிர்ப்பு பிறிதொரு ...றம், ஆளவந்தாரின் அடக்குமுறை-இத்தனை எதிர்ப்புகளுக்கிடையேயும் நாம் செய்த பகுத்தறிவுப் பிரசாரம் நல்ல பலனை கொடுத்திருக்கிறது. அந்தப் பலனை மாற்றுக்கட்சியினரும் அனுபவிக்கிறார்கள். நாம் அதில் பெருமகிழ்ச்சி கொள்ளுகிறோம். சமுதாயச் சீர்திருத்த பணி என்பது அந்த நாட்டு மொழிப்பிரச்சினை யோடு சம்பந்தப்பட்டது என்பதை வரலாறு படித்தோர் உணர்ந்திருப் ...ாய். ஒரு நாடு ...ற்றொரு நாட்டை அடிமைப் படுத்த வேண்டுமென்றால் அந்த நாட்டின் மொழியை ஒழித் ...க்கட்டிவிட்டால் ...ளிதாக அடிமைப்படுத்தி விட ...ம். இதைத்தான் இன்று டில்லி பின்பற்றுகிறது. வடநாட்டிற்கு வேட்டைக் காடாக, வடநாட்டு ஆதிக்க வெறி பிடித்த வெள்ளைக் காரர்களுக்கு குபேர பூமியாக, சேட்டுகளுக்கும் பனியாக்களுக் கும் செல்வம் தரும் செந்நெல் பூமி யாகத் தமிழ்நாடு ஆக்கப்பட்டிருக் கிறது. ஆண்டொன்றுக்கு 60 கோடி ரூபாய் அக்ரமமாகக் கொட்டப்படு ...றது, அன்னியனான டில்லிக்கார னுக்கு. 'ஏக இந்தியா' பல்லவியிலே நம்மையெல்லாம் ஏமாளிகளாக்கி விட்டு ஏற்றம் பெறுகிறது வடநாடு. கோடிக்கணக்கில் பணத்தை குவித்துக் கொடுத்தும் நம்மை ஆதிக்கபுரியினரின் நிரந்தர அடிமை யாக்க இந்தியைப் புகுத்தித் தமிழ் மொழியை ஒழித்துக்கட்ட டில்லி அரசு ...ச்சை கட்டிக்கொண்டு திரிகிறது. ...ல் கல்களிலே இந் தியைப்புகுத்தி "புரிந்துகொள்ளமுடிய வில்லையே என்றால்!" என்று பக்தவத் சலமே புலம்புகிற அளவிற்குப் பண்டி தர் சர்க்கார் மொழி வெறியை வளர்க் கிறது. இந்த சந்தர்ப்பத்தில் மலாயா வில் நடந்த ஒரு சம்பவத்தை சுட்டி காட்ட விரும்புகிறேன் மலாயாவில் வழி பெயர்ப்பலகைகளில் ஆங்கிலம், மலாய், சீனம், தமிழ் ஆகிய நான்கு மொழிகளில் அந்த அரசாங்கத்தார் எழுதி வைத்திருக்கிறார்கள். அந்தப் பலகையில் உள்ள தமிழ் எழுத்துக் களை எடுத்துவிட்டு அவைகளை இந்தியில் எழுத வேண்டும் என அந்த சர்க்காரிடம் வடநாட்டு இந்தி வாலாக்கள் இந்தியத் தூது வர்மூலம் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் மலாயாவில் பெரும்பாலோர் தமிழர்களாக இருப்பதால் இந்தி வெறியர்கள் மூக்காடிட்டுக் கொள்ளு மளவிற்கு, முகத்தில் அறைந்தாற் போல் அந்த சர்க்கார் பதில் சொல்லி விட்டது சூழ்ச்சி வலைகளும் சூதுப் படுதாக்களும் தயாரிப்பதில் பெயர் பெற்ற (காதுமைப் பிரியர்கள் இன்னும் என்ன என்ன சதிகள் புரியப்

போகின்றனர் என்பதை பொறுத் திருந்து பார்ப்போம். இந்தியாவின் தேசீய மொழிகளாக 14 மொழிகள் அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கின்றன என்று ஏட்டளவில் எழுதிவிட்டு, 14 மொழிகளில் ஒன்றான இலக்கிய வளமும் இலக்கண முறையும் அற்ற இந்தியை மற்ற மொழி பேசுபவர்கள் மீது திணிப்பது எந்த விதத்திலும் சரியாகுமா? இந்தி பொதுமொழி யாக இருப்பதற்கு ஏன் தகுதியில்லை என்பதைப் பலமுறை விளக்கியிருக் கிறேன் இருந்தும்மீண்டும் ஒருமுறை எடுத்துச் சொல்கிறேன் ஒரு நாட்டின் பொதுமொழியாக ஒரு மொழி இருப் பதற்குச் சில தகுதிகள் தேவைப்படு கிறது முதலாவதாகப் பல ஆண்டு களாகச்சீரும்சிறப்புமாகத்தனக்கென சில இலக்கண விதிகளைக் கொண்டு அன்றுமுதல் இன்றுவரை பெரும் பாலான மக்கள் பேசுகின்ற மொழி யாக இருக்கவேண்டும். இரண்டாவ தாக அந்த மொழி தனக்கென சொந்தமாக மாற்றாரும் போற்றக் கூடிய இலக்கியங்களை கொண் டிருக்கவேண்டும். மூன்றாவதாக மனிதசமுதாயம் தோன்றிய காலத்தே ஒரு இடத்தில் வாழ்ந்த மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்கு அந்த மொழி பயன்பட்டிருக்க வேண்டும். இந்திக்கு இம்மூன்று தகுதிகளும் அமையவில்லை என்பது உள்ளங்கை நெல்லிக் கனி. இந்திக்கு இலக்கண இலக்கியங்கள் கிடை யாது. 220 மொழிகள் பேசுகின்ற மக்களைக் கொண்ட இந்த இந்தியத் துணைக்கண்டத்தில் தமிழ் ஒன்றுதான் நிறைந்த செல்வத்தை கொண் டுள்ளது தமிழுக்கு அடுத்தபடியாக வங்காள மொழியும் அதற்கு அடுத்தபடியாக பஞ்சாபி, இந்தி, ஒரியா, குஜராத்தி, ராஜஸ்தானி, இந்தியும் பெரும்பான் மையோர் பேசுகின்ற சிறந்த மொழி களாகக் கருதப்படுகின்றன. 9 வது நூற்றாண்டிற்கு முன்பு தமிழைத் தவிர வேறு எந்த மொழியும் உயிர் வாழ்ந்ததில்லை. 9-ம் நூற்றாண்டில் சமஸ்கிருதம் செழிப்புற்று இருந்ததே என்று நீ கேட்கலாம். ஆனால் சமஸ் கிருதம் அந்தணர்களுக்கும் பூதேவர் களுக்கும் சொந்தமான ஒரு மொழி யாக இருந்ததே தவிர மக்கள் பேசுகின்ற ஒரு மொழியாக இருந்த தில்லை. 6-வது நூற்றாண்டில் ஆரியர் கள் ஆதிக்கத்தை ஒழித்து சுட்ட பௌத்தர்கள் தமது பிரசாரத்தை பாலி மொழியில்தான் செய்தனரே தவிர சம்ஸ்கிருதத்தில அல்ல. எனவே அந்தணர்கள்தவிர பிறர் சம்ஸ்கிருதம் கற்றுக்கொள்வது பாபம் என்று கருதப்பட்டதால் அதை மக்கள் பேசுகின்ற மொழி என்று நாம் சொல்வதற்கில்லை. ஆகவே தான் செத்த மொழிகளான லத்தீன் அராபிக் வரிசையில் சமஸ்கிருதமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவையெல் லாம் ஆராயுங்கால் தமிழைத்தவிர வேறு எந்த மொழியும் 500 ஆண்டு களாகச் சீரும் சிறப்புமாக வாழ்ந் தது கிடையாது என்பது தெரிய வருகிறது. இந்தி கடந்த 300 ஆண்டுகளாகத்தான் ஓரளவு சிறப்பாகக் காட்சியளிக்கிறது

இரண்டாவதாக மற்ற மொழிகளின் உதவியில்லாமல் தமிழ் தனித்தியங்கு கிறது. ஆனால் இந்தி மொழி தன்வளத் திற்குப் பெரும்பாலான சமஸ்கிருதச் சொற்களைக்கடன்வாங்கியிருக்கிறது. சமஸ்கிருதத்தின் உதவியின்றி இந்தி இயங்கமுடியாது மூன்றாவதாக இந்தி பேசுபவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான மொழியைப் பேசவில்லை. இந்தியில் பீஹாரி-இதைப் பற்றிச் சற்று ஆராய்வோம். இந்தியாவில் அதிகமான மக்கள் பேசுகின்ற மொழி களை மூன்று குடும்பங்களாகப் பிரித் திருக்கிறார்கள். கார்வாரி மொழி "ஆஸ்ட்ரோ ஆசியாடிக்" குடும் பத்தை சேர்ந்தது. தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகியமொழிகள் திராவிட குடும்பத்தைச் சேர்ந்தவை. சிந்தி, ஒரியா, வங்காளம் (பெங்காலி) ஹிந்தி, இராசஸ்தானி, குஜராத்தி, பஞ்சாபி, மராத்தி ஆகிய மொழிகள் இந்துக் குடும்பத்தை சேர்ந்தவை. இந்துக் குடும்பத்தில் உள்ள இந்தி மொழி ஒரே சீராக எல்லா இடங் களிலும் பேசப்படவில்லை. வடநாட் டில் பேசப்படுகின்ற இந்தி ஒவ்வொரு இடத்திலும் வேறு வேறு முறையில் பேசப்படுகிறது. இந்திபேசும் மக்கள் மூன்று விதமான இந்தியைப் பேசு கிறார்கள். ஒன்று பீஹாரி. இதை 34 மில்லியன் மக்கள் பேசுகிறார்கள் இரண்டாவது கிழக்கு இந்தி. இதை 22 மில்லியன் மக்கள் பேசுகிறார்கள். மூன்றாவது மேற்கு இந்தி. 40 மில்லி யன் மக்கள் பேசுகிறார் கள். கிழக்கு இந்தி பேசு கிறவனுக்கு மேற்கு இந்தி விளங்காது. மேற்கு இந்தி பேசுகிறவனுக்கு கிழக்கு இந்தி விளங் காது. இந்த இரண்டு இந் தியும் பீஹாரி இந்தி பேசு கிறவனுக்கு விளங்காது. ஆகவே இம்மூன்றையும் 'இந்தி' என்று அழைப்பது பகுத்தறிவிற்கு ஒவ்வாதது. இம்மூன்று வெவ்வேறான மொழிகளைப் பேசுகின்றவர்கள் அத்தனைபேரையும் மொத்தமாகக் கணக்கிட்டு இந்தியாவில் இந்தி பேசு கிறவர்கள் பெரும்பான்மையோர். எனவே இந்திதான் பொதுமொழி யாக இருக்கத் தகுதி படைத்தது என்று வாதிடுவது மடமை அப் படியே பெரும்பான்மையோர் இந்தி பேசுகிறார்கள்; எனவே இந்திதான் பொது மொழி என்று வாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும் அதுவும் தவறு. ஏனென்றால் ஒரு மொழி பொது மொழியாக இருப்பதற்கு அதிக மக்களால் பேசப்பட வேண் டும் என்று நியதி இருந்தால் இன்று அகில உலகப் பொது மொழியாக ஆங்கிலம் இருக்கத் தகுதியற்றது என்ற தீர்ப்புக்கு ஆளாக நேரிடும் உலகில் பேசப்படுகின்ற மொழி களின் மொத்த எண்ணிக்கை 2800. ஆங்கிலம் இந்த உலக முழுவதும் பேசப்பட்டாலும் மொத்தத்தில் 30 கோடி பேர்தான் எழுதவும் பேசவும் அறிந்திருக்கிறார்கள். ஆனால் சீன மொழியை 50 கோடி மக்கள் பேசு கின்றனர். எனவே பெரும்பான்மை யோர் பேசுகின்ற சீன மொழியை அகில உலகப் பொது மொழியாக உலக மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் உலக மக்கள் ஆங்கிலத்தைத்தான் பொது மொழி யாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்களே

தவிர சீன மொழியை அல்ல எனவே இதிலிருந்து ஒரு மொழி பொது மொழியாவதற்குப் பெரும்பான்மை மக்களால் பேசப்பட்டால் மட்டு... போதாது. கருத்துக்களை வெளியிடு... தற்கு எளிதாகவும் தற்கால வி... ஞான அறிவினைப் புகட்டக்கூடிய தாகவும், தலைசிறந்த இலக்கியங் களை கொண்டதாகவும் இருக்க வேண்டும் என்று தெரிகிறது. அப்படி பார்க்கும்போதுதான் இந்தி பொது மொழியாக அருகதையற்றது. தமிழ்மொழிதான் இந்தியாவின்பொது மொழியாக இருக்கத் தகுதிபெற்றது என்பது புலனாகின்றது. நீ தமிழன்; எனவே நீ தமிழை வானளாவப் புகழ்கின்றாய் என்று கூறலாம். என்னுடைய கருத்துக்களை நீ ஏற்றுக் கொள்ள வேண்டாம். தலை சிறந்த ஆங்கில அறிஞர்களின் புத்தகங் களைப் படித்துப் பார். எந்த ஆங்கில அறிஞனாவது இந்தி யில் இலக்கியங்கள் வரைந்திருக் கிறானா? அல்லது இந்திமொழியின் சிறப்பைப் பாடியிருக்கிறானா? ஆனால் தமிழ்மொழியின் சிறப்பை அறிந்து அதனை ஐயம்திரிபறக் கற்றுத் தேம்பாவணி என்ற ஒரு சிறந்... நூலை இயற்றிய வீரமாமுனிவர் ஒ... இத்தாலியப் பாதிரியார். மற்... கிராண்ட், ஆலன், வெஸ்ட்ரோ... E. B. டேலர், ஆ... பிரட்ரஸ்ஸல், வாலஸ், தாமஸ் ஹக்ஸ்லி, H. P. பிளான்பர்டு, லார்ட் ஆவ்பரி, H. G. வெல்ஸ் போன்ற அயல்நாட்டு அறிஞர்கள் நூற்களிலே தமிழ்மொழி யின் சிறப்பைப் பற்றியும் திராவிட இனத்தின் புகழ் பற்றியும் எழுதி வைத்திருக்கிற பக்கங்களைபுரட்டும் பொழுது என் மனம் சொல்லொணா மகிழ்ச்சி கொள்கிறது. ஓய்ந்த நேரத்தில் அவைகளையெல்லாம் படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் கால்டுவெல், போப் போன்ற வெள்ளையர்கள் தமிழை எவ்வளவு அன்புடன் நேசித்தார்கள என்பதை அவர்களது புத்தகங்களை படிக்கும்பொழுதுதான் உணரலாம். இத்துணைச் சிறப்புப்பெற்ற தமி... நீக்கிவிட்டு இந்தியினைப் புகுத்த ஆ... வந்தார் நினைப்பது சரியாகுமா... அப்படித்தமிழைப்பொது மொழியா... டில்லி ஏகாதிபத்ய வாதிகளுக்... விருப்பமில்லையென்றால் ஆங்கிலத்... இன்னும் முப்பது அல்லது நாற்... ஆண்டுகளுக்கு நீடிக்க வைக்கல... ஆங்கிலமா? தமிழா? என்ற பிரச்... யில் தமிழுக்கு நாம உயிர் கொடு... வும் தயங்கோம். ஆனால் ஆங்கிலம... இந்தியா? என்று கேட்கும்பொழு... நிச்சயமாக நாம் ஆங்கிலத்தைத்தா... ஆதரிப்போம். ஏனென்றால் இந்தியை விட ஆங்கிலம் ஒரு சிறந்த மொழி எ... பதை வடநாட்டு தலைவர்களுக்... தமிழ்நாட்டை அடகுவைக்க நி... கும் துரோகிகளான கம்யூனிஸ்ட் ... கிரஸ் கட்சிகளைச் சேர்ந்த 'அறி... கள்' தவிர மற்றவர்கள் ஒப்... கொள்கிறார்கள். ஆங்கிலத்தை எடுத்துவிட்டு இந்தி சிறிது சிறிதா... புகுந்துகொண்டிருக்கிறது. தமி... பெருமையை - தமிழன் கலா... தை-தமிழன் நாகரிகத்தை-தமி... இலக்கண வளங்களை உலகி... எடுத்துச் சொல்ல ஆங்கிலம்தா... பயன்பட்டது. ஆங்கில மொழி... மூலம்தான் நம் பெருமையை ... கோர் உணர்ந்தனர். ஆங்கி... போய்விட்டால் நம் மதிப்பு மறை... விடும். இந்தி மொழிமூலம் அ... உலகத்தொடர்பு கொள்ளமுடிய...

— 10-ம் பக்கம் —

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

…என்னாம்

…ர் 6 | 27—6—'59 | இதழ் 2

…மானம் காப்பது தீர்மானம்!

…வானம் பொத்துக்கொண்டு வடிந்தது!

…ஆகாயம் கண்ணீர் சொரிந்தது!

…டல் நனைந்தது; ஆடை நனைந்தது; நிற்கும் இடம் எல்லாம் சேருய் …து.

…என்றாலும் இம்மியும் நகரவில்லை; அணுவும் அசையவில்லை. திருச்சி …மெங்குமிருந்து திரண்டுவந்த திராவிடர் அனைவரும் அமைதியாய் … கடுமழை பெய்தும் அன்னார் அகலாது நின்றதேன்? ஆமாம்! …றையூர் மாநாட்டின் இரண்டாம் நாளில் தீர்மான வேளை! கூட்டத்தில் …று கூவிப் பிதற்றிவிட்டுக் கலையும் பரம்பரையினர்க்கு, தீர்மான … ஒரு பொழுதுபோக்கு வேளையாய் இருக்கும். ஆனால் கடமையும் …யமும் கட்டுப்பாடும் பெற்றெடுத்த ஒப்பிலா மணிகள், தம் எதிர்கால …ன் நிலைபற்றி முடிவெடுக்கும் அவ்வேளையில் அப்படி இருக்கமுடியாது. …காழிகளின் நாட்டியம் நடக்கும் இடத்தில் வேண்டுமானால், வார்த்தை …கைகளைக் கேட்போர் திரள்வர். வாழ்வின் முடிவு காணும் இவ்விடத் … மு. கழக மாநாட்டில் அப்படிப்பட்டோர்க்கு வேலையும் இல்லை. …உணர்ந்து ஒன்றுபட்டுத் துறையூரில் திராவிடர் அணி, நம்வாழ்வை …ும் நல்ல பல முடிவுகளை எடுத்திருக்கிறது. பதினான்கு தீர்மானங்கள் …றியிருக்கின்றன; திராவிடர் தம் வாழ்த்தொலிகளோடு; ஆதரவு …ளோடு!

…தல் தீர்மானம், மறைந்த தருமாம்பாளம்மையார். திருவாளர்கள் … பெருமாள், பல்லபுரம் இராமச்சந்திரன். சயமங்கலம் பெருமாள் …ரர் மறைவிற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தது

…ளாட்சிப் பண்பின் குழந்தைப்பருவம் இது. சிலர் இதன் கழுத்தை …தற்கும் வேறு சிலர் இதை நெஞ்சொடு அணைப்பதற்கும் போட்டி … காலம் இது. வாய்கிழிய மக்களாட்சிப் பண்பின் மாண்பைப் பேசிய …சாரின் மண்டையில் விழுந்த பலத்த அடி 1957-ம் ஆண்டைய, …த் தேர்தல் முடிவுகள். "பகுத்தறிவுள்ள மனிதர் அனைவருக்கும் வாக் …யளித்துவிட்டோம்" எனப் பறையறைந்தனர் பாரத புத்திரர்கள். … வாக்குரிமை பெற்ற மலையால மக்கள் தந்த தீர்ப்பு தமக்குப் பாதக …அமைந்துவிடவே "ஆகா! ஓகோ!" என ஆர்ப்பரித்துக் கிளம்பி …கின்றனர். மக்களாட்சி விதிகளின்படி ஒரியக்கம் ஆட்சிக்கு வந்து …பின், மாற்றியக்கத்தினர் வரும் தேர்தல்வரை பொறுத்திருந்து தாமும் …லில் போட்டியிட்டுத் தேர்தலில் வெல்வதே நன்று;முறையும் அதுவே. …ல், பொதுவுடைமையர் பதவிக்கு வந்துவிட்டதைச் சகிக்காத காங்கிர …ப பல வழிகளில் இறங்கியிருக்கின்றனர். கூடாத நட்பெல்லாம் கூடி …கிறது; ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுகிறது. "கூடாது இந்தத் …யல்!" என்றால் "நேரடி நடவடிக்கைக்குப் பெயரா தீச்செயல்?" என் …ர். எந்த நோக்கத்தோடு எவர் இப்படித் தீயவழி சென்றாலும் …கழகம் அதை ஏற்காது. காங்கிரசாரின் பழிகளால் கிழிந்த வயிறுகளும் … ஓடுகளும் கிடந்தன, இயற்கை பேரழகு பொழியும் கேரள வீதி … பன்னிருவர் உயிரிழந்ததாக அறிகிறோம்; நெஞ்சம் பதை பதைக் …து! துப்பாக்கிப் பிரயோகம் நடக்கவேண்டிய அளவு துடுக்குத்தனம் …திருக்கிறது. இந்த வேளையில் பொறுப்புள்ளோர் செயல் ஒன்றுதான். …படையான விசாரணை ஒன்றின் மூலம்தான் இத்தீச்செயல் …கான அடிப்படைகளை அறியமுடியும். முகமூடிக்குப்பின் இருக்கும் …க்காரர்களை, பகிரங்க விசாரணை மூலம்தான் அறியமுடியும் …மையை அறிவதற்குரிய ஒரே இடமான நீதிமன்றத்தைக் கூட்ட …ி, கேரளத்தை ஆள்வோர்மீது அவநம்பிக்கையை உண்டாக்குவ …என்பதையும் இங்கு எழுத விழைகிறோம்....

…ல் நடந்தும், பகைவர் உடல் குடைந்தும் முழங்குவது நம் …ய! விண்முட்டி, பகைவெட்டி, வெற்றிப் பறைகொட்டிப் பாடுவது …ழே! ஆனால் அத்தீந் தமிழின் முறையறியாது, திறனறியாது அழித் …முடிப்போர் கையாளும் வழிகள் பல. எவ்வெத்துறையில் எல்லாம் …யைப் புகுத்தமுடியுமோ அவ்வத்துறையில் எல்லாம் இந்தியைப் … நம்மை மாய்க்க நினைக்கின்றனர். அத்தீமைச் செயலின் ஒரு …துயே, வானொலி என்ற நல்லொலி இருக்க நச்சு மொழியைப் பேசல் …கும். கட்டுப்பாடாக, உறுதிப்பாட்டுடன் அவர்கள் "ஆபாச வாணி"யைச் சொல்லி வருகின்றனர். ஆயிரம் முறை எடுத்துக் காட்டியும், தம் வாயை மூடிக்கொள்ளாது, ஆகாத மொழிப் பெயரையே கையாள்கின்றனர் நேருவின் கூலிகள். இதைக் கண்டித்து, தமிழன்பர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் போராடி, சிறையில் கிடப்பதும் நாமறிந்ததே. இன்னும் கேளாக் காதினராகவே இருக்கும் அந்தத் தில்லி மூலவர்களின் கொட்டம் அடங்கவில்லை. நாம் போராட்டத்தின் எல்லைக் கோட்டுக்கு வந்துவிட்டோம். பகைவர் குருதியில் மூழ்க நம் வாள்கள் துடிக்கின்றன. களபலியாயினும், வாகை சூடினும், கடமையைச் செய்து முடிக்கத் துடிக்கிறது, நம் உள்ளம். அதற்கு வாய்ப்புத் தரத்தான் போகின்றனரா? வாட்டம் பெறத்தான் போகின்றனரா, வடவர்? அவர்கள் முடிவு தெரியவில்லை. ஆனால் நம் விடிவு கருதி நாம் போராடத்தான் வேண்டி வரும்போலும். இதைத்தான் வரவேற்புக் குழுத் தலைவர் அன்பில் தர்மலிங்கம் அவர்களின் பேச்சும், மாநாட்டுக்குத் தலைமை ஏற்ற சிந்தனைச் சிற்பியின் பேருரையும் காட்டுகின்றன; மூன்றாவது தீர்மானமும் இதைத்தான் கூறுகிறது. தோழர்களே! தயாராகுக!

தொழிலாளர் உரிமைகள் பறிக்கப்படும் கொடுமை—ஜனநாயகம் ஜனித்திருப்பதாகச் சொல்லப்படும் இந்த நாளிலும் நடக்கத்தான் செய்கிறது. அதனை இன்று விளக்குவதுதான்—நிதர்சனச் சான்றுதான், மதுரை ஆலைகளின் கதவடைப்பு. இக்கதவடைப்புபற்றிய முழு விவரத்தையும் முன்னரே "தென்ற"லில் தந்துள்ளோம். நாட்கள் நாற்பதாகியும், எல்லாக் கட்சியினரும் தம் எதிர்ப்பைத் தெரிவித்தும், வெள்ளை நிர்வாகம் தளரவில்லை. தேயிலைத் தோட்டங்களில் வெள்ளையர்களைக் கட்டுப்படுத்த நடுவிட அரசினர் முனைவதுபோல், ஆலைகளை ஆட்டுவிக்கும் வெள்ளையரைக் கட்டுப்படுத்தியிருந்தால் மதுரை ஆலைக் கதவடைப்பு நடந்திருக்காது; முந்திராவின் கான்பூர் ஆலைத் தகராறும் எழுந்திருக்காது. எதுவும் நடந்தபின் நேரு மகன் நொந்து வருந்திப் பயனில்லை! ஆமாம்! மத்திய அரசும் மாநில அரசும் உடன் கூடி, தக்க முடிவெடுக்காவிட்டால், விளைவு வேறாகும்; வேதனை, ஆறாகும்! எதை விரும்புகின்றனர்? இதனைச் சுட்டிக்காட்டி பரிகாரம் கேட்கிறது துறையூர் மாநாட்டின் மூன்றாவது தீர்மானம். இன்னும் பல தீர்மானங்கள் நாட்டு நலன் கருதி நிறைவேறின.

கழக மாநாட்டில் முக்கியமாய்ச் செயல்பட்டு மானம் காப்பது, தீர்மானம்! ஆமாம்! நாம் நம் மானம் காப்பது தீர்மானம்! ★

வாழ்க! வாழ்க!

உத்தமபாளையம் ஹருத்தியா ராவுத்தர் கல்லூரி தமிழ் ஆசிரியர் தோழர் ப. சுருளிவேல் பி.ஏ. (ஆனர்ஸ்) அவர்கள் தோழியர் சு. மயில் அவர்களை, சின்னமனூரில் 24-6-'59 காலை 10-30 மணி அளவில் வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். உத்தமபாளையம்கல்லூரி ஆசிரியர்களும் திரளான கழகத் தோழர்களும், மற்றும் உறவினர்களும் நட்பினர்களும் வந்திருந்து மணமக்களை வாழ்த்தினர். அழகிய மண விழாக் கண்ட அன்னாருக்குத் "தென்ற"லும் தன் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறது. வாழ்க! வாழ்க!

டாக்டர் எஸ். தருமாம்பாள் பெண்கள் இலக்கிய வகுப்பு

★

டாக்டர் எஸ். தருமாம்பாள் பெண்கள் இலக்கிய வகுப்பு சென்னை நக்கீரர் கழகச் சார்பில் 20-6-59 முதல் ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 3 மணி முதல் 4 மணி வரை சென்னை, கொண்டலையர் தெரு, 'தமிழகம்' கட்டடத்தில் நடைபெறும்.

திரு. ஆர். எஸ். பங்கயச் செல்வி (தமிழ் ஆசிரியை, கல்யாணம் பெண்கள் உயர்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை) அவர்களால் 'சிலப்பதிகார' வகுப்பும், திரு. எஸ். கௌதமி தேவி எம். ஏ., பி. டி., (துணைத் தமிழ் விரிவுரையாளர், மாகாணக் கல்லூரி, சென்னை) அவர்களால் 'புறநானூறு' வகுப்பும் நடைபெறும்.

மகளிர் அனைவரும் தவறாது வந்து பயன்பெற வேண்டுகிறோம்.

இங்ஙன…
அனசூயா மோக…
துணைச்செ…
நக்கீரர் கழகப்…

சோற்று மந்திரி

திடீர் திடீர் என அற்புதமான யோசனைகளைப் பொழிவதில் கெட்டிக்காரர்கள் சிலர் உண்டு. அவர்கள் அநாதைகளாய் சென்னை வீதியில் அலைவதைக் காண்கையில் தான், எனக்கு வருத்தம் மேலிடுகிறது. ஏன்தான் இவர்கள்-இந்த விந்தை மிகு அரசியல் மேதைகள்—இறந்து போன சாணக்கியனின் புகழ் பரப்ப இருந்துவரும் வாரிசுகள்—பராரிகளாய் - கூலிக்குப் பாடும் வாயர்களாய் அலைகின்றனரோ என்ற வருத்தம்தான் எனக்கு. அண்மையில் இது, பல புதுப் பிரச்னைகளைக் கிளப்பியிருக்கிறது.

"தி. மு. கழகத்தார் பிரயாணி வரி போடலாமா? அந்த வரிதான் வருமானம் தருவதா! வேறு வழிகளில்லையா? என்னைக் கேளுங்கள். எள் என்பதற்குள் 'எங்கே பிண்ணாக்கு?' என்று துடிக்கும் எங்களைக் கேட்கக்கூடாதா! இதோ, சில முத்து முத்தான யோசனைகள்..." என்று மீசையை முறுக்கிக்கொண்டு கிளம்பியிருக்கிறார் ம. பொ. சி.. தளர்ந்து போனதை அடிக்கடி நெய் போட்டு முறுக்கிவிட்டுக் கொண்டு, அது உதிர்க்கும் உருப்படாத யோசனைகள் ஓராயிரம்! அண்மையில் சொன்னதாம், "பிரயாணிகள் வரிக்குப் பதிலாக, சினிமாவை எடுத்து நடத்துங்கள்; பஸ் சர்வீசை எடுத்து நடத்துங்கள்!" என்று. அடுத்த வீட்டுக்காரி தங்கத் தட்டு வைத்திருக்கிறாளே என்ற ஆத்திரத்தில், தகர டப்பாவைத் தட்டிக்கொண்டு திரியும் நடுத்தெரு ஒய்யாரிகள் வர்க்கத்தைச் சேர்ந்த இதற்குச் சொல்லிக்கொள்வோம், சில உண்மைகளை. முதலாவதாக இது சொல்லும் இந்த யோசனைகள் எதுவும் புதிதன்று. ஏற்கனவே நமது தோழர்கள் அறிந்தாய்ந்த கருத்துக்கள் தாம். அடுத்து, இந்த முறைகளுக்கான முயற்சிகள் என்ன ஆயின என்பதை ஆராய வேண்டும்.

சென்னை போன்ற மாநகராட்சி மன்றங்கள், சினிமாவைத் தேசியமயமாக்குவதிலிருந்து தடுக்கப்படுவது உறுதி. சாதாரணமாக, சினிமாவின் மூலமாக வரும் கேளிக்கை வரியை மாநில அரசு வசூல் செய்து, நிர்வாகச் செலவு போக மீதி உள்ள தொகையை நகராட்சியினர் வசம் ஒப்படைக்கின்றனர். ஆனால் நகராட்சியினரே நேரடியாக இந்தக் கேளிக்கை வரியை வசூலித்தால் இன்னும் கொஞ்சம் அதிகப் பணம் கிடைக்கும். எனவே தாங்களே நேரடியாய் வசூலித்துக்கொள்வதற்கு, அனுமதி கேட்டனர் நகராட்சியினர். நல்ல நோக்கமுள்ளதானால் மாநில அரசு அதனை அனுமதித்திருக்க வேண்டும். ஆனால் மாநகராட்சிகளின் வருவாயை நசுக்குவதன் மூலம் அவற்றின் நற் பணிகளைத் தடைப்படுத்த நினைக்கும் மாநில அரசாங்கங்கள் அனுமதி தரவில்லை.

...து, சென்னை அரசினர் சென்னை ... நடத்திவரும் 'ஸ்டேட் ... போர்ட் பஸ் சர்வீ'' சைத் ... தரும்படிப் பலமுறை ... சென்னை மாநகராட்சி ... அண்மையில் மறுபடியும் ...ட்கப்பட்டது. அதுபற்றிப் பேச ...னது வருவதாகவும் எழுதினர். மாநில அரசோ, 'உங்களிடம் பஸ் சர்வீசை ஒப்படைக்கவும் விரும்பவில்லை. நீங்கள் தூது வரவும் வேண்டியதில்லை!' என்று எழுதிவிட்டது. இது மட்டுமல்ல; சென்னை நகரில் இந்த ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் வண்டிகளும் பிற கார்களும் சொகுசாகச் செல்வதற்காகச் சாலைகளைப் போட்டு 30 இலட்சத்திற்குமேல் செலவழித்துப் பராமரிப்பது சென்னை நகராட்சி. ஆனால் அந்த வண்டிகளின் மூலமாய் வரியனைத்தையும் பெற்றுக்கொள்வதோ சென்னை மாநில அரசு. சாலை பராமரிப்புக்காக மாநில அரசு தரும் உதவித் தொகையோ ஏறத்தாழ 3 இலட்சம் தான். இதையாகிலும் சரிபாதி தாருங்கள் என்று கேட்கின்றனர். என்றாலும் மாநில அரசு உதவவில்லை. இவற்றை எல்லாம் அறியாதவர்போல் வினவுகிறார் ம. பொ. சி., 'ஏன் நீங்கள் சினிமாவையும் பஸ்ஸையும் பிடுங்கக்கூடாது!'' என்று. "அய்யா! நீர்தான் எதை எதையோ பிடுங்கித் தந்தவராயிற்றே! இவற்றையும் பிடுங்கித் தாருங்களேன்; பார்ப்போம்!'' என்பதைத் தவிர நாம் வேறென்ன சொல்லமுடியும். கேட்டுக் கேட்டுப் பார்த்து, வேறு வழியில்லாத நிலையில் பிரயாணிகள் வரியை மேற்கொள்ள முனைந்தால், சீறுகிறார்; பாய்கிறார், ம. பொ. சி.! அய்யகோ! உமக்கொரு அனுதாபம்!

★

நடுத்தெரு அனுதையைப் பார்த்துவிட்டுத் திரும்பியதும் நம் கண்ணில் படுகிறார், விருதுநகர் நெடுமாறன். இந்த விந்தை மனிதர் நாணயச் சந்தையில் விலை போகாத போலிச் சரக்கு. "அரசியல் நாடோடிகள்'' என பாபுராவ் பட்டேல் குறித்திருக்கிறார் சில புகழ் வெளிச்சக்காரர்களை. நேருவும் கிருட்ண மேனனும் ஒவ்வொரு ஊராய், ஒவ்வொரு நாடாய்ச் சுற்றி வருவார்கள். அங்கங்கே அவர்கள் தங்கள் புகழை வெளிச்சம் போட்டுக் கொண்டதுதான் மிச்சமே ஒழிய, பாரத மாதாவுக்கு மானத்தை மறைக்க ஒரு முழத் துணிகூடப் பெற்று வரவில்லை. அந்த அரசியல் நாடோடிகள் பட்டியலில் இப்போது காமராசரும் சேர்ந்திருக்கிறார். இத்தனை நாட்களாய் இராமநாதபுரம் மாவட்டத்தின் மேலில்லாத காதல் திடீரெனப் புறப்பட்டதேனோ? சூறாவளி வேகத்தில் 23 நாட்கள் சுற்றி வருகிறாராம், காங்கிரஸ் மந்தை மேய்க்கும் விந்தை மனிதர் காமராசர். ஊர் ஊராய்ச் சுற்றி வரும் இவர் ஏன்தான் இந்தப் பாடுபடுகிறார்? மக்கள் குறைகளை நேரில் அறியத் துடிக்கிறாரா? சுற்றுப்பிரயாணப் படியைச் சற்று அதிகம் பெற இந்தத் திட்டமா? ஆனால் இவை எல்லாம் அவரிடம் கேட்கலாமா? ஒன்று கேட்கலாம். முதுகளத்தூர்ப் பகுதி, வெங்களமாய் - வேதனைக் காடாய்க் கிடந்தபோது இவர் எங்குப் போயிருந்தார்? பொல்லாத சாதிச் சண்டையால், வலிவில்லாத மக்கள் இரணகளத்திலே கிடந்தபோது, எந்த இராசகுமாரியைப் பார்க்கப் போயிந்தார், இந்தக் காமராசர்? அப்போது இல்லாத இந்த அக்கறை இப்போது பொத்துக்கொண்டு வந்ததேன்? நாம் இந்தக் கேள்வியை அவரிடம் கேட்கக்கூடாது. ஏனென்றால் அவர் இப்போது நம்மைக் கேள்வி கேட்கத் தொடங்கியிருக்கிறார். என்ன செய்வது? அறிவு வளர்ந்துவிட்டது. அவர் நம்மிடம், கேள்வி போடுகிறார்.

"திராவிட நாடு கிடைத்தால் சோறு கிடைக்குமா?''

எப்போதுகேட்கிறார் இப்படி? இராமநாதபுரத்துச் சுற்றுப்பயணத்திலே! இந்த "உலா''விலே, அவருக்கு அநேக வகை நிலா விருந்தும், நெய்ச்சோறும், தேன் சொட்டும் கனிகளும் படைக்கப்பட்டனவாம். ஏழையர் குறை கேட்கச் சென்ற இந்த "முதல் மனிதர்க்கு'' செட்டி நாட்டரசர் போன்றோரிடத்தில் விருந்துகளாம். ஏழையின் வீட்டிற்குப் போய், கூழையும் கஞ்சியையும் உப்பில்லாமல் குடித்துவிட்டுப் பேசவில்லை இப்படி. கொழுத்த பண முதலைகளின் பவளமாளிகைகளுக்குச் சென்று உண்டுவிட்டு, அந்த மயக்கத்திலே கேட்கிறார், "திராவிட நாடு கிடைத்தால் சோறு கிடைக்குமா?'' என. திருவோடு ஏந்தித் தெருவோடு வருகின்ற பண்டாரம் கேட்டிருந்தால் வியப்பில்லை. கோலேந்திப் புறப்பட்ட இம்மந்திரிகள் கேட்டால் நியாயம் உண்டா? பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்பர். இப்போது "மாநிலத்தின் முதல் மனிதர்க்கு'' மதி போயிருக்கிறது. இனிக் கட்டாயம் நிதானமும் போகும். எச்சரிக்கை, இந்த மனிதரைக் கண்டால்.

இவர்தான் முன்னொரு முறை கேட்டார், "சுதந்தரம் சோறு போடுமா?'' என்று. அந்தக் கருத்துக் கொத்தை உதிர்த்த இந்த வாய்தான் மறுபடியும் கேட்கிறது: "திராவிட நாட்டில் சோறு கிடைக்குமா?'' ஒன்று உறுதியாகச் சொல்கிறேன். உமது ஆட்சியில்தான் விடுதலை வந்தாலும் பசிப் பிணி போகாது. ஆனால் திராவிட நாட்டாட்சியில் எல்லோருக்கும் சோறு அறுசுவையுடன் கிடைக்கும். அத்தோடு உமக்கும் கிடைக்கும், உம் பஞ்சைப் புத்தியை உதறிவிட்டு வந்தால். அல்லது மாறாக, பல கோடி மக்கள் வறுமையில் உழல்கையில், நீர் மட்டும் சீமான் வீட்டுத் தங்கக் கிண்ணத்தில் உண்டுவிட்டு, "இப்படிச் சோறு கிடைக்குமா?'' என நாக்கைத் தொங்கவிடுவது, உமக்கும் அழகல்ல; உம் பதவிக்கும் பெருமையல்ல!

★

தாய் எட்டடி என்றால் குட்டி பதினாறடி பாயும் என்பர் இங்கே, காமராச எசமான் பத்தடி என்றால், பிற தீவட்டிகள் இருபதடி பாய்கின்றன. இவற்றிற்கெல்லாம் சாவடி தர நமக்குத் தெரியாது என்றே நினைக்கின்றன. காமராசரோடு சுற்றுப் பயணம் செய்யும் ஆர். வி. சாமிநாதன் என்பவர், தனது "நாவளத்தையும் பணவள'' த்தையும் காட்டத் துடித்திருக்கிறார். "வடக்கு வாழ்கிறது என்கிற தி. மு. கழகத்தார்க்கு ரிட்டன் டிக்கட் எடுத்துத் தருகிறேன். அங்கே போய்ப் பார்த்துவிட்டு வந்து பேசட்டும், வடக்கு மட்டும் வாழ்கிறதா என?'' என்றாராம். ஆர். வி. எஸ். அவர்களே! அப்படியானால் உங்கள் "பாரத''த்தில் வடக்கும் வாழவில்லையா? என்றால் உங்களின் பன்னிரண்டாண்டுக் காலத்தில் யாரும் பயனடையவில்லை. எனின், ...

என்ன பயன்? அதுவும் ...
இதுவும் கெட்டுக் கிட...
தென்றால், நீங்கள் பிடித்த துப்...
யால் என்ன பயன்? தொ...
திட்டங்களால் யாது நன்...
எந்தப் பகுதியையும் வளப...
முடியாதவர்களானால் நீங்கள் ...
தைகளா? நத்தைகள் தந்த மு...
களில்லையா? அயகோ! ...
மாதா உங்களைப் பெற்றெ...
இந்தப் பஞ்சக் கொடுமை...
காட்டிடுவதற்குத்தானே?
நீங்கள் ரிட்டர்ன் டிக்கட் எ...
தருவதற்கு முன்பே வடநாடு ...
வந்த பலர், உங்கள் தங்கமு...
பங்கப்படுத்துகின்றனரே!
திரும்பியசெழியனின்கட்டுரை...
சம்பத்தின் பேச்சுக்களையும்...
படித்ததில்லையா? கேட்டதி...
அவர்கள்தாம் தி. மு. கழ...
யிற்றே. உங்கள் இயக்கத்...
தாளர் எழுதியவற்றைப் ...
வில்லையோ? "வடநாட்டி...
னாட்டுக் காங்கிரசாருக்...
பில்லை; தென்னாட்டுத் ...
ஏற்பாரில்லை!'' என்று ...
ஒருவர் உங்கள் முகாமி...
னும் நினைவு வரவில்...
படி வரும்? 57-ம் ...
தோல்வி அதிர்ச்சியிலி...
மீளவில்லையே! வெட்க...
கம். உங்கள் பெரும...
"கல்கி'' ஏட்டில் அதன் ...
துணை ஆசிரியரான ...
எழுதியிருந்தாரே, பலப்...
கரையையும் காங்கிர...
யும் கண்டுவிட்டு வந்து...

"தென்னாட்டி...
திட்டங்கள் இல்லவே...

'வடநாட்டிலோ, ...
ஆலைகளும் தொழிற்சா...
நிமிர்ந்து நிற்கின்றன!''

"ஏன் வடக்கில் ...
பெரும் தொழில்கள்? ...

"ஏன் இங்குமட்டு...
மையும் பட்டினிப் பட்...

இப்படியெல்லாம் தி...
கல்கியில் எழுதியிரு...
விக்டோரியா அறி...
எல்லாம் மறந்நீரே...
மறந்துதான்விட்டீர்.
இப்படிப் பேசியிருப்பீ...

இவற்றை எல்லாம் ...
தான், இந்தச் ...
களும், சாணக்கிய...
களும், தீவட்டி...
கொதித்துக் கிளம்...

அஃறிணைப் பண்மை ...
பயன்படுத்தியதற்கு ...
என்னதான் நாம் ...
கட்டுப்படுத்த முய...
வில்லை. அவர்கள்...
டுக்கு உட்பட்டி...
மனமும் கட்டுப்ப...
கொதிக்கும் அத...
வில்லையே! என்ன ...

★★★ கடந்த வாரம் அரசியல் உலகில்
"சில''வற்றைப் பற்றிய சிறு குறிப்புச்



நூல் நயம்

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை
மதுக்கோப்பை காத்தேந்திக் குடியன்காணும்
மாறாத கனவுலகம் காட்சியாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

அண்ணாவின் சட்டசபைச் சொற்பொழிவுகள்

(முதல் தொகுதி)

"மக்களாட்சிப் பண்பு மாய்ந்திடுமோ? வாழ்ந்திடுமோ?" என்ற ் தலைதூக்கி நின்ற காலத்தில்—சரியான, முறையான எதிர்க்கட்சி மன்றில் இல்லாததால் காங்கிரசார் போதைமிஞ்சி ஆடிய காலத்தில், சூரியன் கிளர்ந்தெழுந்தான்; புதிய சேதி சொன்னான். ஆனவ னரின் அட்டகாசங்களைத் தட்டிக் கேட்பதற்கு ஆளில்லாததால் டப் பிரசண்டமாய் முழங்கிக் கிழித்தனர், 1957 பொதுத் தேர்தல் . பின்னர்தான் தமிழகம் தந்த புதிய சேதி அன்னுரைக் கவிழ த்தது. அப்போதும் விட்டுக் கொடுக்காமல், "15 பேர்தானே வரு றனர்! என்ன செய்திடுவர்?" என்றனர். அந்தப் பதினைந்து பேரும் த்தடுத்துக் கேள்விகளை எழுப்பினர் சட்டமன்றில். தொகுத்தும் ந்தும், தொல்லையைக் காட்டியும், போக்கும் வழிகளை கூறியும் அவர் பேசிய பேச்சுக்கள் சுவைப்பதற்குரியன; சிந்தித்தற்கு வாய்த்தவை. காலத்திற்கு நம் தொண்டையும் மக்களின் பாலல் காம் கொண்டிருக் பற்றையும் பறை சாற்றுவன, அப்பேச்சுக்கள்.

சட்டமன்றில், ஏதோ ஆடவும் பாடவும்தான் வேண்டுமென்பது வும், அனந்தநாயகியும் சுப்பிரமணியமும் க்கனும் காமராசரும் றைத்தெரிந்து அவற்றைச் செய்வதற்குதான் வந்திருப்பதுபோலவும் மு. கழகத்தார்க்குப் பேசத்தானே தெரியும்?" என்றும் கூறினர்; விடுத்த கணைக்குத் தப்பிக்கமுடியாது சீறினர். இவ்வளவு திறனையும் யவை, அறிஞர் அண்ணாவின் கருத்தாழமும் சொல் வளமும் மிக்க பேச்சுக்கள்தாம். ஒவ்வொரு மசோதாவின் மீதும் அவர் நம் தின் கருத்துக்களை எடுத்துக் கூறிய பான்மை வியத்தற்குரியது. ாக வாதிடும் எதிர்க் கட்சி இல்லாததால் ஆடி வந்த அமைச்சர் டின் நாடி தளரச் செய்தன அண்ணா பேசிய பேச்சுக்கள்.

சஞ்சிக்கோட்டையில் ஏறியவர்கள் எல்லாம் தேசிங்குராஜாக் லை. காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் எல்லாம் வீர தீர ந்திரப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டார்கள் என்று கருதிக்கொண்டு, அவர்கள் பிறரைப்பற்றி 'அவர்களெல்லாம் பிரிட் டிஷ் ஆட்சிக்குக் கால் வருடியவர்கள்; வெள்ளையர் ஏகாதிபத்திய தவர்கள்' என்று பழைய பழைய வார்த்தைகளை எடுத்துச் சொல் லும் நேரத்தில் என்னுடைய முகம் சுருங்கவில்லை; ஆனால் அவர் களுடைய முகம் சுருங்குகிறது!"

"முதலமைச்சர் காமராசர் அவர்கள் நல்ல வேளையாக திரு மணம் ஆகாமல் இருக்கிறார்கள். அவர்மட்டும் கலப்புத் திருமணத் திற்கு முன்மாதிரியாக இருந்து வழிகாட்டினால் இந்த மாநிலமே ஆச்சரியத்தில் அதிர்ச்சியுறும்; பாரதமே துள்ளி எழும். கொள்கைக் காக வாழ்கிறவர்கள் எல்லோரும் பாராட்டுவார்கள். அவர் தலைமை யிலே இயங்குவதில் நாம் எல்லோரும் பெருமைப்படுவோம்."

இப்படி நம் நிலைகளையும் கருத்துக்களையும் விளக்கி அண்ணா பேசிய பேச்சுக்கள் இந்நூலில் முறையாகத் தொகுக்கப்பட்டிருக்கின்றன. நல்ல முயற்சி; பல்லாண்டுகளுக்கும் நமது பணியை விளக்கும் அருமைக் கருவூலம். திராவிடத்தாரிடம் இது கட்டாயம் இருக்க வேண்டிய படைக் கருவி. "என்ன செய்தார் அண்ணா?" என்பார்க்கு, "இவை இவை செய்தார்!" எனக் கூறி வாயடைக்கும் கருவி இது.

விலை ரூ. 2.

வெளியீடு:
வி. ஜி. எஸ். மணி,
சென்னை-1.

செந்தமிழ்க் கட்டுரை.

ஆசிரியர்: ப. சுந்தரவேலனார்.

"மொழிப் பயிற்சி பெறுவார்க்குக் கட்டுரைப் பயிற்சி இன்றியமையாதது" என்று தன் முன்னுரையில் கூறுகிறார், ஆசிரியர். "அக்கட்டுரை களைப் படித்துப் புரிந்துகொள்வதற்கும் எழுதுவதற்கும் இலக்கணப் பயிற்சி இன்றியமையாதது" என்பதால், நூலின் முற்பகுதியில் அடிப் படைத் தமிழ் இலக்கணத்தை எளிய இனிய முறையில் தொகுத்துத் தந்திருக்கிறார். உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரிகளில் புகுமுக வகுப்புக் களிலும் பயில்வார்க்கு இது மெத்தப் பயன்படும், இரு வழிகளில். பட்டுத் துணி, பட்டு துணியாக வருமா? அன்னாளுக்கும் அந்நாளுக்கும் என்ன வேறுபாடு? வினைத் தொகையில் வலிமிகுமா? "முயற்சித்தல்" சரியா? "முயலுதல்" சரியா? எதை, எதைப் பயன்படுத்தலாம்? எப்போது பயன்படுத்தலாம்?—இந்த விளக்கங்களைத் தரும் உதவி, ஒன்று. கட்டுரை எழுதுகையில் எப்படிச் சொற்களை அமைத்தால் கட்டுக்கோப்பு வரும்? தொடர்களை எப்படிப் பகுதி பிரித்தால் பொருள் செம்மையாய் அமையும்?-இவற்றிற்குப் பதில் அளிதுத்த் தரும் உதவி, இரண்டாவது. விலை மிகுதி ஆனாலும், அழகான தாளில் அருமையான அச்சுடன் தருகிறார், இந்த உதவிகளை. மாணவர்கள், வாங்கிப் பயன் பெறலாம்; நல்ல உறுதுணையாய் வைத்துக்கொள்ளலாம்.

விலை ரூ 2-50.

வெளியீடு:
பாரதி பண்ணை.
75, சிறிய வாய்க்கால் தெரு
புதுச்சேரி.

வீரத் தமிழன்னை டாக்டர் எஸ். தருமாம்பாள் அம்மையார் இரங்கல் மலர்.

காலப் புயலுக்குப் பலியான தமிழகத்து மாதரசி தருமாம்பாளின் நினைவு, என்றும் அழியாத ஒன்று. பகைக் குலத்தின் பூண்டறுக்கும் திறமையும் வலிமையும் கொண்ட அவ்வம்மையாரது மறைவு தமிழகத் திற்கு ஒரு பேரிழப்பாகும். நாளடைவிலும் மறக்கமுடியாத அத்துன்பச் செய்தியைக் கேட்டதும் நல்லோர் பலர் உகுத்த கண்ணீர்த் துளிகளே, இவ்விரங்கல் மலர். அம்மையார் வாழ்க்கை நிகழ்ச்சிப் புகைப் புகைப் படங்களும், வாழ்க்கைக் குறிப்புக்களும் அடங்கியுள்ளன. அவற்றிற்கு மேலாக அறிஞர் அண்ணா, சபாநாயகர் யூ. கிருட்ணாராவ், டாக்டர் மு. வரதராசனார், அப்பாத்துரையார் முதலிய நூற்றுக்கணக்கானோரின் இரங்கலுரைகள் இதில் உள்ளன. தமது மன்றத்துத் தலைவியாக இவரைப் பெற்ற மாணவர் மன்றத்தினர் இதனைத் தொகுத்து இலவசமாக வெளியிட்டிருக்கின்றனர்.

கிடைக்குமிடம்:
சென்னை மாணவர் மன்றம்,
17, இரத்தின முதலி தெரு,
சென்னை 1.

—7-ம் பக்கத் தொடர்ச்சி—

முன்னர் தலைவனைச் சந்தித்த பொழுது அச்சத்தை விடலாம் என்றவர் இங்கு நாணத்தையும் விடலாம் என்றார். ஆனால் எதன் பொருட்டும் "கற்பினை" இழக்க லாகாது, என்பது தொல்லாசிரிய ருடையவும் தமிழ் மக்களுடையவும் கருத்தாகும்.

களவிலே கண்டோர் இருவர் இயல்பு சுட்டியவர், அங்குத் தோன்றாத் துணையாய் வரும் தோழியையும் மறவாமல் குறிப்பிடு கிறார். தோழியின் துணை இன்றியும் காதல் தோன்றுவதுண்டு. பின்னர் தோழிக்குத் தெரிய வரும். தோழி யும் கூட்டத்திற்குத் துணை செய் வாள். இருவரும் சந்திக்கும் இடத்தைத் தலைவிதான் கூறுதல் வேண்டும். காரணம், தலைவிதான் அதிகமான கட்டுப்பாடுகட்கு உட் பட்டவள்.

இவ்வாறு தோழியின் உதவியால் அடிக்கடி தலைவன் தலைவியைக் கண்டு பேசி, புணர்ந்து மகிழ் வான். இம்மகிழ்ச்சியில் மனத்தை மறத்தல் இயல்பாதும், இதனை யறிந்த தோழி விரைவில் மணம் முடிக்கத் தலைவனை வேண்டுவாள்.

இவ்வுறவு அயலார் அறிந்த வேளை அஃது அம்பலாய் வெளிப் படும். அம்பல் அலராய் மாறுமுன் தோழி இச்செய்தியைத் தன் தாய்க்குக் கூறுவாள்; செவிலித் தாய் பின் நற்றாய்க்குக் கூறுவாள்; நற்றாய் சமயம் பார்த்துத் தந்தைக் குக் கூறுவாள். அனைவரும் மனம் ஒப்பத் திருமணம் நடைபெறும். பின்னர் நடாத்தும் அறவாழ் "கற்பியல்" வாழ்வாகும்.

மனம் ஒன்றுபடுதற்கு நிலைக ளாய் அமையும் இக்களவி முறை இன்று சீர்கெட்டுக் காண படுதற்குக் காரணம், மக்கள் உ வளர்ச்சி குறைந்து விலங்குணர்ச் விரிந்தமையே என்றால் வியப பில்லை.

அடுத்த கிழமை—

"கற்பியல்"

திருமணம்

17-6-'59 அன்று இராதா கிருஷ்ணராஜு அவர்களின் மைத்துனர் இராமதாசுவுக்கும் இராமதிலகத்திற்கும் தேவ கோட்டை மாந்தோப்புத் தெரு விலுள்ள மணமகன் இல்லத்தில் திருமணம் சிறப்பாக நடை பெற்றது. உறவினர்களிடமிரு தும் நண்பர்களிடமிருந்தும் பரிசு பொருள்களும் வாழ்த்துச் செய் களும் வந்திருந்தன.

வாழ்க மணமக்கள்! வாழ்க

ஐயம் அகற்று!

கண்ணதாசன் "பதில்" தருகிறார்.

சோ. திருத்தமிழன், பிளிச்சி.

காங்கிரசல்லாது பிற கட்சிகளும் தூற்றும் அளவுக்கு தி. மு. க. செய்யும் வினை வழிகள் என்ன ?

சொலல்வல்ல சோர்விலாத் தலைவனைப் பெற்றிருப்பது; ஈடு இணையற்ற எண்பது பேச்சாளர்களைப் படைத்திருப்பது; அங்கிங்கெனுதபடி, தமிழகம் முழுவதிலும், கழகம் பரந்து விரிந்து 3000-க்கு மேற்பட்ட கிளைக் கழகங்களைக் கொண்டிருப்பது; இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களால் நிறையப் பெற்றிருப்பது; பர்மாவிலும் மலாயாவிலும், இலங்கையிலும் ஜாவாவிலும், போர்னியோவிலும் சுமத்ராவிலும், தென்னுப்பிரிக்காவிலும் வாழும் அத்தனை திராவிடர்களின் இதயங்களிலும் குடிகொண்டிருப்பது; அனைத்துக்கும் ஆணிவேராக, திராணியுள்ளவர்கள் மட்டுமே துணிந்துசொல்லக் கூடிய தெளிவான உண்மைகளை, இடைவிடாமல் ஒலி பரப்பிக் கொண்டிருப்பது !

★

பாலமுனுசாமி,

முதலியார்பேட்டை.

சொல்லின் செல்வர் சம்பத் அவர்கள் கழகத்தை விட்டு விலகப் போவதாக இரண்டு ஏடுகள் தெரிவிக்கின்றனவே- உண்மையா ?

தோழர் சம்பத் அவர்கள் கொள்கைக்காக உறவினரையே வெறுத்தவர்; அண்ணுவின் இதயத்தில் ஒரு தனியிடத்தைப் பெற்றவர். உடலிலிருந்து உயிர் விலகலாம்; கட்சியிலிருந்து சம்பத் விலகமாட்டார்.

மக்களாட்சி வழங்கியுள்ள உரிமைகளுள் ஒன்று, எதையும் யாரும் எழுதலாம் என்பது. அந்த ஏடுகள் எதையும் எழுதும் ஏடுகள்தானே !

★

இராச. பார்த்தசாரதி,

சென்னை-21.

"சிவகெங்கைச் சீமை"யில் காட்டப்படும் கடைசி நடனம் எதன் பொருட்டுச் சேர்க்கப்பட்டுள்ளது ? அது அவசியமா ?

வெள்ளையரின் முதல் ஆதிக்கத்தை எதிர்த்து நின்ற பாளையங்களில், கடைசிப்பாளையம் சிவகெங்கை. அதனுடைய வீழ்ச்சி ஓர் ஊழியின் முடிவாகச் சித்தரிக்கப் பட்டிருக்கிறது ஊழியைக் கூத்திலே காட்டுவது, நாடகமரபு. அதனுல் கதை முடிவில் அதனைச் சேர்ப்பது அவசியமாயிற்று.

★

வி. இராமானுசம்,

தாத்தையங்கார்பேட்டை

கட்டபொம்மன் உண்மையிலேயே ஒரு தெலுங்கன்தானு ?

கட்டபொம்மனுக்குக் காலமுக்கி விட்டுக் காசு சேர்ப்பவர்கள்கூட, அவன் தெலுங்கன் என்பதை மறுப்பதற்கில்லை. மணியாச்சிக்கருகில், ஒட்டநத்தம் என்ருெரு கிராமம் இருக்கிறது. கட்டபொம்மன் பங்காளிகளின் சந்ததியினரே இன்றும் அங்கே இருக்கிருர்கள். ஆமாம், அந்தக் கிராமத்தில் நூற்றுக்குத் தொண்ணூற்ருென்பது பேர் கம்பளத்தார்கள். என் தந்தையார் அங்கே "என். வி. ஜின்னிங் பாக்டரி" என்ற பெயரில் ஒரு பஞ்சாலை நடத்திவந்தார். ஆறு வயதிலிருந்து பன்னிரண்டு வயதுவரை நான் அங்கேதான் இருந்தேன். நான் இருந்த காலத்தில்கூட அந்த நடுத்தரக் கிராமத்தின் மத்தியில் கட்டபொம்மன் காலத்திய மண் கோட்டை ஒன்று இருந்தது. பாளையங்கோட்டைச்சிறையிலிருந்த ஊமைத்துரையை விடுவிப்பதற்கு, கம்பளத்து இளைஞர்கள் கூட்டிய ரகசியக் கூட்டம் அந்தக் கோட்டையில்தான் நடைபெற்றதாம்.

எங்கள் பஞ்சாலையில் பெரும்பாலும் கம்பளத்து நாயக்கர்களே வேலை பார்த்தார்கள்; கடற்கரை நாயக்கர், சுப்பா நாயக்கர் எனப் பலர். கடற்கரை நாயக்கர் என்பவர் எங்கள் பஞ்சாலையின் இரவுக் காவலாளி. என்னை அவர் ஒவ்வொருவருக்கும் "செட்டியார் கொடுகு" என்று அறிமுகப்படுத்தி வைத்ததும், எல்லோரிடமும் தெலுங்கிலேயே பேசிக்கொண்டிருந்ததும் இன்னும் நினைவிருக்கின்றன. அவருக்கும் சக்கம்மாதான் குலதெய்வம். அந்தக் கிராமத்தில் சிறுபான்மையினரான தமிழர்களுக்கு, முத்துமாரியம்மன் குலதெய்வம். கட்டபொம்மனுக்கு 150 ஆண்டுகளுக்குப் பிறகுகூட அவர்கள் தெலுங்குதான் பேசுகிருர்கள் என்ருல், கட்டபொம்மன் தெலுங்கன் என்ற ஆராய்ச்சியில் யாருக்கு மாறுபாடு தோன்ற முடியும் ?

★

பா. குருமூர்த்தி,

செம்மினிப்பட்டி.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடுத்த பொதுச் செயலாளர் யார் ?

படித்தவர்கள்-ஆங்கிலத்தில் தெளிவாகப் பேசக்கூடியவர்கள்-அத்தனை தோழர்களின் நன்மதிப்பையும் பெற்றவர்கள்-சில்லறைக் குணங்களுக்குச் சிறிதும் இடங் கொடுக்காதவர்கள் - தன்னலமற்றவர்கள்-மதிப்பிற்குரிய தோற்றத்தைப் பெற்றவர்கள்-பெருமைக்குரிய வாழ்க்கை நடத்துபவர்கள், இருவரை, இதுவரை அந்தப் பதவியில் கண்டோம். அப்படிப்பட்டவரே அடுத்தவராக வருவார்.

★

பன. அண்ணமலை,

தேவகோட்டை,

"மேயர்" என்ற ஆங்கிலச் சொல்லை "மே—அர்" என்று பிரித்து நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் பொருள் சொன்னர்கள் அதைக் கேலி செய்யும் சிவஞானம் "கால்-உதை" என்பதுதான் "கழுதை"யாயிற்று என்கிருர். உங்கள் கருத்து என்ன ?

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் சொன்ன பொருளைப் பற்றிப் பெரும் புகழ் பெற்ற தமிழ்ப் பேராசிரியர் ஒருவர் என்னிடம் வெகுவாகப் பாராட்டிக் கூறினர். மன்னர்களையும் அவர்கள் மணி முடிகளையும் பற்றி இலக்கியங்களில் வரும் பாடல்கள் எல்லாம் "மேய" என்ற அடை மெ[...] தாங்கியிருப்பதை அவர் காட்டினர். "கால்—உதை[...] தற்கு "கழுதை" என்று சொல்பவரைக் கழு[...] மதிப்பதற்கில்லை. "ம. [...] ஞானம்" என்பதை பொறுக்கி சிவஞானம்" சொல்லுகிருேம்? பொ[...] கூடிய ஆங்கில வார்த்[...] தமிழ்ச் சுவை காண்பது[...] களின் நாநயத்திற்குச் துட்டுக்கு முட்டிக்கொண்[...] பிராணிகளுக்கு அது வரா[...]

★ ★

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

அகில இந்திய மொழியாக ஆங்கிலம் இதுநாள்வரை பயன்பட்டு வந்திருக்கிறது. ஆங்கிலமொழியில் விஞ்ஞானத் தொடர்புள்ள புத்தகங்கள் ஏராளம் உண்டு. எல்லாவற்றிற்கும் மேலாக ஆங்கிலம் உலகெங்கணும் ஒரு பொதுமொழியாகக் கருதப்பட்டு வருகிறது. எனவேதான் ஆங்கிலமா இந்தியா என்ற சர்ச்சை எழும் பொழுது ஆங்கிலமே என்று நாம் அழுத்தந் திருத்தமாகக் கூறுகிருேம். இந்திமொழியைத் தமிழ் நாட்டில் நுழைப்பதற்காகவே அன்றையதினம் அரசுக் கட்டிலில் ஏறிய ஆச்சாரியார் இன்று இந்தியை எதிர்த்து போர்க் குரல் எழுப்புகிருர். தாளமுத்து நடராசன் என்று இரு தமிழ் காத்த வீரர்களை சுட்டுப் பிணமாக்கி விட்டு ஆயிரமாயிரம் தாய்மார்களையும் மாணவர்களையும் தொண்டர்களையும் சிறையிலடைத்து ஆனந்த நடனம் ஆடிய ஆச்சாரியாரே இன்று இந்தியை எதிர்த்துக் கிளம்பிவிட்டார் என்ருல் அதற்கு காரணம் என்ன ? செழிப்பில்லாத மொழியின்மூலம் நம்மைச் சீர்குலையச் செய்வதற்கு டில்லி போடுகின்ற சதித் திட்டம் என்பதை ஆச்சாரியார் உணர்ந்து கொண்டார். எனவேதான் டில்லியின் யதேச்சதிகார போக்கை எதிர்ப்பதற்கு சுதந்திரக் கட்சி என்று ஒரு புதிய கட்சியை உருவாக்கியிருக்கிருர்கள். இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று கூற விரும்புகிறேன் காங்கிரஸ் கட்சியின் ஊழல்களையும் சர்வாதிகாரப் போக்கையும் கண்டிப்பதற்கு அந்தக் கொள்கைகளின்று மாறுபட்ட கொள்கைகளை உடைய ஒரு கட்சிதான் எதிர்க் கட்சியாக இயங்கமுடியும். அப்படிப் பார்க்கும்பொழுது தி. மு. கழகத்தைத் தவிர வேறு எந்தக் கட்சிக்கும் அந்தத் தகுதியில்லை என்பது புலனாகின்றது. கம்யூனிஸ்ட் 'சோஷியலிச'த்தை கா[...] எடுத்துக்கொண்டு கம்யூ[...] சோஷியலிஸ்ட் ஆகிய கட்சிகளுக்குப்பலத்த அடி[...] இந்திய அரசியலிலிருந்த[...] இரண்டு கட்சிகளையும் விட்டது. ஏக இந்தியானவ[...] நாட்டான் கொள்கைத் தொ[...] பலமாக ஆதரித்ததன் கார[...] தமிழ்நாட்டில்கம்யூனிஸ்ட் க[...] கல்லறை கட்டப்பட்டுவிட்ட[...] நாட்டைப் பொறுத்தவரை ச[...] கம்யூனிஸ்ட் ஆகிய இரண்[...] இந்தியாவை ஆதரிக்கின்[...] கையை உடைய ஒரே [...] ஆனல் தி. மு. கழகம் த[...] சில அடிப்படைக் கொ[...] வகுத்துக்கொண்ட விடு[...] களின் பாசறை முகாம். [...] திற்காக—திராவிட மக்க[...] பாடுபடுவதுதான் நமது [...] சென்னை மாநிலமெங்கும் [...] கட்சியை எதிர்த்து முதன்[...] போட்டியிட்டு மாபெரு[...] பெற்ருேம். இந்த தேர்[...] காங்கிரஸ் கட்சியை [...] சக்தி படைத்தது தி[...] தவிர வேறு ஒன்றும் இ[...] லண்டனுக்கும் வா[...] எட்டிவிட்டது. உலகமே [...] கண்டு கூர்ந்து [...] அத்துணை வலிமை ப[...] கழகத்தை ஆதரிப்ப[...] சாரியார் காங்கிரஸை[...] புதுக் கட்சி ஒன்று [...] விந்தையிலும் வி[...] கிறது. ஆதரிப்ப[...] "இந்தி ஆதிக்க[...] புதிய கட்சி உருவாக்க[...] வாரீர்" என்று ஆச்சா[...] பது புத்திசாலித்தனம[...] மல்ல.

—சோசப் பேஸ் எம். ஏ.

★ ★

—6-ம் பக்கத் தொடர்ச்சி—

கங்கைக்கரைக்கு வந்திருக்கமாட்டேன். மதுரைக்குச் சென்றதால் விளைந்த தீமை என்ன என்று கேட்கக் கூடும். இதோ கூறுகிறேன். மதுரையில் பாண்டிய மன்னவன் மடிந்தமை அறிந்தேன். இடைக்குலமாதரி மடிந்தமை அறிந்தேன். கவுந்தி அடிகள் கலங்கி உயிரைப் போக்கிக்கொண்டது கேட்டேன். இவற்றை எல்லாம் அறிந்து, என் ஊராகிய சோழநாட்டுத் தலைச்செங்கானம் திரும்பினேன். கோவலன் இறந்ததை நான் சொல்லக் கேட்டு அவன் தாய் இறந்தாள். கண்ணகிக்கு உற்றதைக் கேட்டு அவள் தாய் இறந்துபட்டாள். இவ்வாறு இன்னும் சில நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. நான் இந் நிகழ்ச்சிகளை என் வாயினுற் கூறக் கேட்டுச் சிலர் சிலர் இறந்துவிட்டார்களே என்று இரங்கி, அந்தப் பாவத்தைப் போக்கிக்கொள்ளக் கங்கை நீராட வந்தேன். இங்கே உன்னைக் கண்டேன். இதுதான் நான் வரும் காரணம்" என்று கூறினன் என்பது நீர்ப்படைக்காதையிற் காணப்படும் செய்தி. சிலர் சிலர் மடிந்தார்கள் என்ற செய்தியை நாவினுல்சொல்லிய காரணத்தினுலே பாவம் உண்டாயிற்று என்று நம்புவதும், அப் பாவத்தைப் போக்கிக்கொள்வதற்குக் கங்கையிற் போய் நீராடுதல் வேண்டும் என நம்புவதும் பண்டைய தமிழகத்தில் இருந்த நிலைகள் அல்ல. இவ்வாறு நம்பிய மாடல மறையவன் போக்கு வேருக இருந்தது என்பதைச் சிலப்பதிகாரம் கூர்மையாகக் கவனிப்பவர்க்குக் காட்டாமல் இல்லை. இந்தக் காலத்தில் உள்ள அளவு போக்குவரவு வசதி இல்லாதவொரு காலத்தில் மாடலன் தன்னுடைய பாவத்தைப் போக்கிக்கொள்ளத் தெற்குக் கோடியில் உள்ள குமரியிலும் வடதிசையில் உள்ள கங்கையிலும் நீராடிக்கொண்டிருந்தான் என்ற செய்தி வேருெரு நாகரிகம் தமிழ்நாட்டு நாகரிகத்தோடு வந்து மோதத் தலைப்படும் காலத்தின் செய்திகள் சிலவற்றைச் சிலப்பதிகாரம் தாங்கிக்கொண்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டும் அன்ருே ?

(தொடரும்)

கலையும் அரசியலும் கலந்ததெப்படி ?

கட்சி வண்ணம் எவரெவர் பூசினர் ?

சிங்கை ஏட்டின் நடுநிலைக் கருத்து !

[சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் **மிழ் முரசு"** எனும் ஏடு, தனது -5-'59-ம் நாள் இதழில் **சென்னைக் கடிதம்"** என்ற தலைப் ல் தந்துள்ள கருத்துகள், இவை. தனை அனுப்பி உதவியவர் காலாலம்பூர் திரு. வீ. செல்வ ரசு.]

லையும் நிலையும்

வெண்ணிலாவும் வானும்போல, வீரனும் கூர்வாளும்போல, நகமும் சதையும்போல. நாரும் பூவும்போல, மலரும் மணமும்போலத் தமிழ்நாட்டில் இப்போது கலையும் அரசியலும் ஒன்றோடொன்று கலந்துவிட்டன; இனிப் பிரிக்கமுடியாது எனச் சொல்லத்தக்க முறையில் இரண்டும் இணைந்துவிட்டன!

தேர்தல் போட்டி

கலைஞனுக்குக் கட்சி வேண்டுமா என்ற பிரச்னை இங்குச் சில காலமாகவே இருந்துவருகிறது. வேண்டும் என்போர் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் தலைமையின் கீழும், வேண்டாம் என்போர் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மறைமுகத் தலைமையின்கீழும் பிரசாரம் செய்து வந்தனர். அண்மையில் சென்னை நகரசபைக்கு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்ட நடிகரான யாதாத்தம் பொன்னுசாமி பிள்ளையை, நடிகர்களுக்குப் பொதுவாழ்வு வேண்டாமெனக் கருதும் - கூறும் - சிவாஜி ஆதரித்தார்! யதார்த்ததை எதிர்த்துப் போட்டியிட்ட நடிகரல்லாத ஒருவரை (தி. மு. க அபேட்சகரை) எம். ஜி. ஆர் ஆதரித்தார்! இதில் நடிகர் - நடிகரல்லாதவர் என்ற பிரச்னையைவிடக் கட்சிக் கண்ணோட்டம்தான் பெரிது என எம். ஜி. ஆர். வேண்டுமானால் சமாதானம கூற முடியும்! ஆனால் தம்மைக் காங்கிரஸ்காரர் எனக் கூறிக்கொள்ளாத சிவாஜியின் நிலைமைதான் சங்கடமாயிருந்தது!

உதிரம் பருகும் ஓநாய்

இது ஒருபுறமிருக்க, அதே ராயப்பேட்டையில தேர்தல் வெற்றி விழாக் கூட்டம் நடந்தபோது, அதில் பேசிய எம். ஜி. ஆர். கலைஞர்கள் நிச்சயம் அரசியலில் பங்குகொள்ள வேண்டும் என்பதற்கு நல்ல பல காரணங்களைக் கூறி, உருக்கமான வேண்டுகோள் விடுத்தார். அன்றைய அவரது பேச்சு கலைஞர்களைக் கவரக் கூடியதாக இருந்ததால், அதற்கு எதிர்நடவடிக்கை எடுக்க விரும்பிய மாற்றுத் தரப்பினர்-அதாவது சிவாஜி கணேசன் கோஷ்டியார் என்றுசொன்னால் தவறில்லை - ஒருபத்திரிகைப் போராட்டத்தைத் துவக்க முடிவு முடிவுசெய்தனர். திரையுலகச் செய்திகளை வெளியிடுவதற்கென்றே .. என்ற ஒரு தினசரிப் பத்திரிகை ஆமாம், நாளிதழ்தான் - சென்ற சில நாட்களாக நடந்துவருகிறது. இது சிவாஜி சார்புடையது, ஆதரவுபெற்றதுஎனக் கருதப்படுகிறது. எம். ஜி. ஆரின் மேற்படிப் பேச்சுக்குப் பிறகு, இப் பத்திரிகையில் 'கலைஞர்களுக்குக் கட்சி வேண்டுமா? எழுதி அனுப்புங்கள்!' என்று வாசகர்களுக்குவேண்டுகோள் விடுத்தது. 'கலைஞர்களுக்காகவே நடத்தப்படும் பத்திரிகை' எனப் பறைசாற்றிக் கொள்ளும் அந்தக் கலை ஏடு, கட்சி வேண்டாம் என்பதான ஒரு கட்சியைக் கலையுலகில் உண்டாக்கச் சிலருடைய தூண்டுதலின்பேரில் முயல்வதாகத் தெரிகிறது.

தாவிவந்த த. அ. க. !

இந்தச் சூழ்நிலையில் வெளிவந்தது சிவாஜியின் வீரபாண்டியக் கட்டபொம்மன்! 'ஆரியக் கூத்தாடினாலும் தாண்டவக் கோனே. காரியத்தில் கண் வையடா தாண்டவக் கோனே!' என்பதுபோல், அரசியல் வேண்டாம் என்ற பேச்செல்லாம் காற்றில் பறக்க விடப்பட்டு, கட்டபொம்மன் சினிமாப் படத்திற்கான விளம்பரம் முழுக்க முழுக்க அரசியல் ரீதியில் செய்யப் பட்டது. சென்னை நகரின் முக்கிய வீதிகளெல்லாம் வண்ணக் காகிதத் தோரணங்களும் கட்டப்பட்டன. அத்தோரணங்களுக்கிடையே கட்டபொம்மன் தோற்றத்திலிருக்கும் சிவாஜி கணேசன் உருப்படம் அமைந்த சுவரொட்டி அட்டைகள் தொங்கவிடப்பட்டன; அந்தத் தோரணங்களுக்குக் கீழே வீதியில்-தார்ரோட்டில் கொட்டை கொட்டை எழுத்துக்களில்-ஆறடி உயரமுள்ள எழுத்துக்களில் - 'வருகிறான் வீர பாண்டிய கட்டபொம்மன்!' 'வாழ்க ம. பொ. சி!' 'வானம் பொழியுது பூமி விளையுது! உனக்கேன் கிஸ்தி!' என்று எக்காளமிட்டு ஏறு நடை போட்ட வீரபாண்டிய கட்டபொம்மன் வருகிறான்! 'வாழ்க ம. பொ. சி. த. அ. க.' என்பனபோன்ற வாசகங்கள் எழுதப்பட்டன [இதில் த. அ. க. என்பது தமிழ் அரசுக் கழகம் தி. மு. க. பாணியை அடித்த காப்பி.]

சந்தடிசாக்கில்

ஒரு சினிமாப்பட விளம்பரத்திற்கென்று இப்படி நகரெங்கும் தோரணங்கள் கட்டுவதும் வீதிகளில் எழுதுவதும் இதுதான் முதல்தடவை என்பதாலும் சாதாரணமாக இத்தகைய விளம்பர முறை அரசியல் நிகழ்ச்சிகளுக்குத்தான் கையாளப் படுவது வழக்கம் என்பதாலும் கட்டபொம்மன் படத்தில் ஏற்றப்பட்ட கேவாகலர், டெக்னிக் கலர் போதாதென்று 'அரசியல்' வர்ணமும் தீட்டப் பட்டதாகத் தோன்றியது. இலேசான அரசியல் வர்ணம்கூடப் போதாது. அப்பட்டமான அரசியல் கட்சியின் கெட்டிச் சாயத்தையும் பூசத்தான் செய்வோம் என்ற முறையில் தமிழரசுக் கழகத்தினர் (வீரபாண்டியனுக்கு வரவேற்புக் கூறுவதோடும் நிற்காமல்) தங்கள் தலைவருக்கு வாழ்த்துக் கூறும் அதிகப்படி வேலையில் இறங்கினர்.

நினைத்தது ஒன்று !
நடந்தது ஒன்று !

சிவாஜி கணேசனுக்கும் படத் தயாரிப்பாளர்களுக்கும் இது பெரும் சங்கடத்தைத்தான் தந்தது. தமிழரசுக் கழகத்தார் இப்படிச் செய்வார்கள் என அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

கட்டபொம்மனை நாட்டுக்கு அறிமுகப்படுத்திய பெருமை ம பொ. சிவஞானத்திற்கும் அவரது தமிழரசுக் கழகத்திற்கும் சாரும் என்பதில் ஐயமில்லை. இப்படி அவர்களால் பிரபல்யப்படுத்தப்பட்ட ஒரு வரலாற்றுக் கதையைப் படமாக எடுத்தால் வரவேற்பு இருக்குமென்று எண்ணினார்கள் சிவாஜியும் அவரைச் சார்ந்த படத் தயாரிப்பாளர்களும்! அவ்வளவேயொழிய, தமிழரசுக் கழகத்துடன் குலாவும் எண்ணம் சிறிதும் இருந்தல்லை. அதோடு அப்படித் தமிழரசுக் கழகத்தோடு ஐக்கியமாகிவிட்டதாகக் காட்டிக் கொண்டால், அக்கழகத்திடம் வெறுப்புக் கொண்டுள்ள பெருவாரியான மக்களின் ஆதரவு, தாங்கள் எடுக்கும் படத்திற்கு இல்லாமற் போகும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். ஆனால் அதற்காக சிவஞானத்தை ஒரேயடியாக ஒதுக்கி விடுவதற்கும் முடியாமற் போயிற்று. ஏனெனில், அப்படி ஒதுக்கினால், எடுக்கப்படுகின்ற படம் 'சரித்திரத்தை ஒட்டியதல்ல, வெறும் கற்பனை; கட்டபொம்மன் கதையே அல்ல!' என்று சொல்லிவிடக் கூடும். அப்படிச் சொல்லாமல் இருக்கவேண்டும் என்பதற்காக, ம. பொ. சி.யை இழுத்துப் போட நினைத்த சிவாஜி, கட்டபொம்மன் கதை இலாகாத் தலைவராகச் சிவஞானத்தை நியமித்தார். **அதனுடைய விளைவு என்னவாயிற்றென்றால், தமிழரசுக் கழகத்தினர் இப்போது சிவாஜியை விடமாட்டோம் என ஒட்டிக்கொண்டு, கட்டபொம்மனுக்கு வரவேற்புக் கூறுகின்ற 'சாக்கில் தங்கள் தலைவருக்கு வாழ்த்துக் கூறி, தங்கள் கட்சியையும் வளர்த்துக் கொள்ள முயல்கின்றனர்!**

சிவகெங்கைச் சீமை

இந்த நிலைமையில் கண்ணதாசன் பிலிம்சாரின் 'சிவகெங்கைச் சீமை' யும் வெளிவந்தது! தயாரிப்பில் இருக்கும்போதே. கட்டபொம்மனுக்குப் போட்டி இது என்ற பெயர் எடுத்துவிட்டது 'போட்டியில்லை! கொஞ்சமும் இல்லை! கட்டபொம்மன் கதையின் தொடர்ச்சிதான் சிவகெங்கைச் சீமை!' என்று கவிஞர் கண்ணதாசன் போன்றவர்கள் என்னதான் விளக்கம் தந்தாலும், அந்தச் சமாதானத்தை எல்லோரும் ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை கட்டபொம்மன், சிவகெங்கைச் சீமை இரண்டும் தென்பாண்டி நாட்டில் நடந்த சரித்திரக் கதைகள்! இரண்டும் தமிழன் வீரத்தை எடுத்துரைக்கும் சித்திரங்கள்! இரண்டும், வெள்ளையனை எதிர்த்து அன்று போரிட்டவர்களின் முழக்கத்தை இன்றையத் திரையில் முழக்கிக் காட்டுகின்றன! இத்தனை ஒற்றுமைகள் இருப்பதால் ஒன்றுக்கொன்று போட்டி என்பதாகத்தான் சரியாகவோ, தவருகவோ நினைக்கிருர்கள்.

இந்த வகையில் போட்டி இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்குச் சரியான பதில் தேடவேண்டிய அவசியங்கூட இல்லை. ஏனெனில் வேறு வழியில் பெரிய போட்டி, இப் படங்களையொட்டி, ஏற்பட்டு விட்டது. அதுதான் தமிழரசுக் கழகம்-தி. மு. க. போட்டி.

கட்டபொம்மனுக்கு வரவேற்புக் கூறித் தமிழரசுக் கழகத்தினர் வீதிகளில் எழுதினர்கள் அல்லவா? பிறகு, தி மு.க. தோழர்கள் எப்படிச் 'சும்மா' இருப்பார்கள்? மூன்றே நாட்களுக்குள் வகையான சந்தர்ப்பம் கிடைத்தது, அவர்கள் கைத்திறனைக் காட்ட!

மே 16-ந் தேதி கட்டபொம்ம[ன்] வெளியாயிற்று என்ருல், மே 22-[ந்] தேதி திரையிடப்படவிருந்த 'சிவ[] கெங்கைச் சீமை,' பிறகு மே 19 [ந்] தேதியே சென்னை நகரில் வெளியிட[ப்] பட்டது. இப்படி, முதலில் அறிவிக்கப் பட்ட தேதியைவிட மூன்று நாட்[கள்] முன்னதாக வந்துவிட்ட 'சிவகெ[ங்] கைச் சீமை'க்கு - கவிஞர் கண்ண தாசன் படத்திற்கு - தி. மு. க.வின[ர்] அமோக வரவேற்பு அளித்தனர். ★

மகிழ்ச்சி

திருச்சி புனித சூசையப்[பர்] கல்லூரியில் எம். ஏ. வ[கு]ப்பில் பயின்றுவந்த தோழ[ர்] ஜோசப் பெஸ்கி அவர்க[ள்] இவ்வாண்டு இறுதித் தேர்[வி]ல் வெற்றி பெற்றுள்ளார் என்ற செய்தியை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அரும்பாடு பட்டு எம். ஏ பட்டம் பெற்ற தோழர் பெஸ்கியை வாழ்த்துகிறோம்; வாழ்க!

ஆர்வமும் ஆற்றலும் பொங்கும் இவரது உழைப்பு திராவிடத்திற்கு மேலும் புதிய நலன்களை வழங்குவதாகுக!

சிரிப்புத்தான் வருகுதையா!

மறுபடியும் தாலிப் பிரச்னை வருகிறது. தமிழரசுக் கழகம் என்கின்ற குண்டு சட்டிக்குள் கிடக்கும் பதின்மூன்று தொண்டர்களில் ஒருவருக்குத் திருமணம் நடந்தபோது தோழர் "சிவஞான சாமபிராணி" தாலியைப் பற்றிப் பேசினாராம். "கண்ணதாசன் படத்திலேயே தாலி கட்டுகிறார்கள்!" என்றாராம். 'மாலையிட்ட மங்கை' என்று பெயர் வைத்திருப்பதையும் சுட்டிக் காட்டினாராம். (தம்பி, சிவஞானம்! மாலை வேறு; தாலி வேறு!) இதனால் சங்க காலத்தில் தாலி உண்டென்பது உறுதியாகிவிட்டது என்றாராம். அட, என் அறிவே! ஆராய்ச்சி மூளையே! ஒரு ஞானமும் இல்லாததற்கு, சிவஞானம் என்று பெயர் வைத்தார்கள்; அதற்குத் தினமும் புது ஞானம் உதயமாகிறது. முன்பு நடந்த தகராறு "சங்க இலக்கியத்தில் தாலி உண்டா?" என்பதைப் பற்றித்தான். பதினேழாம் நூற்றாண்டுக் கதையிலும் இருபதாம் நூற்றாண்டுக் கதையிலும் தாலி கட்டுவதைக் கண்டுவிட்டு, "ஆ, சங்க இலக்கியத்தில் தாலி! சங்க இலக்கியத்தில் தாலி!" என்கிறார் சிவஞானம். ஒரு பிரச்னையில் மூக்கறுந்து மூளையிலே விழுந்துவிட்ட பிறகும் ...ரட்டு கௌரவத்திற்காக, மீண்டும் கதறுகிறார் அவர். சங்க இலக்கியத்தில் தாலி உண்டா ...கின்ற பிரச்னையில் தோழர் ...ஞானம் எத்தனை இடங்...ில் தன் மீசையில் மண் கண்...ர், தெரியுமா! இப்போது சிவ...கங்கைச் சீமைத் தாலி அவரை ...ண்டுச் சந்திக்கிழுக்கிறது. சரித்...த்தில் என்ன வருகிறதோ ...ந்தக் காலச் சூழ்நிலை தவறாமல் ...டிப்பவன்தான் நல்ல நாட...சிரியன். ஓட்டுக்குடிசையில் ...டிக்கொண்டு கிடந்த கட்ட...பொம்மனை உல்லாச மாளிகை...ல் காட்டுவதுபோல், 'காலச் சூழ்நிலையை மறந்துவிட்டு எழுது...ம் மடத்தனம். அதோடு, ...லியே கூடாது" என்று நான் ...ாதுமே எழுதியதில்லை. ... தென்றல் இதழ்களை, ...ர் சாம்பிராணியார் மீண்டும் ...முறை படித்துப் பார்க்க ...வண்டும். அதோடு சங்க காலம் ...என்பது 17-ம் நூற்றாண்டு அல்ல என்பதை, தோழர் சிவஞானத்துக்கு ஒரு பாடமாகவே போதிக்க விரும்புகிறேன்.

ஃ

அட, கருமமே! கண்றாவியே! ...ந்தப் பைத்தியத்தோடு மாரடிப்...து மீண்டும் என் வேலையாகி...ட்டது. இது ஒரு வேடிக்கை...ம் தோன்றுவதால்தான் ...டும் நான் ஈடுபட்டிருக்...றேன். ஆமாம்! நான் இப்...போது ஒரு குரங்காட்டி.

"சிவகெங்கைச் சீமை" தோல்வியடைந்து விட்டதாம். தோழர் சிவஞான சாம்பிராணியார் இப்படிச் சொல்கிறார். "கட்டபொம்மன்" வெற்றி அவருடைய வெற்றியாம். குதிரைக்குட்டி அழகாயிருக்கிறதென்று, கழுதை அதன் பக்கத்தில் போய் நின்றுகொண்டு, "ஆகா, என் குட்டி! என் குட்டி!" என்கிறது. ஒரு தலைவன் என்கிற தகுதியின்றி, காலையில் எழுந்து சினிமாக்காரர் வீட்டுத்திண்ணையில் போய் உட்கார்ந்துகொண்டு தூங்குகிறவர் எழுந்து வருகிற வரை, தொன்னையையும் திண்ணையையும் பார்த்துக்கொண்டிருந்தவர், தோழர் சிவஞானம். 'கட்டபொம்மன்" வெற்றியைப் பற்றி, சக்தி கிருஷ்ணசாமி மகிழ்ச்சியடைவதில் அர்த்தமிருக்கிறது. இந்த மூளி ஏன் இப்படிக் குதிக்கிறது? "சிவகெங்கைச் சீமை"யில் வரும் தமிழ் வெள்ளத்தை. சிவஞான கிராமணி கனவில்கூட எழுதிப் பார்க்க முடியாது. படித்தவர்கள், அறிவாளிகள், பெரும்புலவர்கள் அனைவரும் வீடுதேடி வந்து கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக்கொண்டார்களே, அந்தக் கூட்டுச்சியல்லவா வெற்றி! ஒரு வார்த்தை கூட எழுதாத— எழுதத் தெரியாத—உருப்படாத பிராணி, டமாரம் அடிப்பதற்குப் பெயரா வெற்றி?

ஃ

'சிவகெங்கைச் சீமை' யின் ஆரம்ப விழாவிற்கு, தோழர் சிவஞான கிராமணியை நான் அழைத்தபோது, அவர் சொன்னார், "நான் ஒரு படத்தை ஆரம்பித்து வைத்தேன். அது வெளிவரவில்லை. இன்னொரு படம் ஓடவேயில்லை! என்னைப் போய்க் கூப்பிடுகிறீர்களே?" என்று. "பரவாயில்லை, வாருங்கள்!" என்று அழைத்துப் போனேன். சிவகெங்கைச் சீமை அடைந்தது தோல்விதானென்றால், அந்தத் தரித்திரம் கைவைத்ததால் வந்த வினை என்று முடிவு கட்டிக்கொள்ளுங்கள்.

ஃ

அரசியல் ஞானி காமராசர் விஷயங்களை எடுத்து விளக்குவதிலே நிபுணர். "பிரயாணி வரியை எப்படி வசூலிக்கப் போகிறீர்கள்? ரயில்வே ஸ்டேஷன் அருகில் கொட்டகை போட்டுக்கொண்டு உட்காரப் போகிறீர்களா?" என்று கேட்டிருக்கிறார். நாட்டு மக்களைப் பிடித்த சனியன், கேட்டவர் முதல் மந்திரியாயிருப்பது.

"காய்கறி வரியை வசூலிக்க, காய்கறி மார்க்கட்டில் கொட்டகை போட்டுக்கொண்டு காமராசர் உட்காரப் போகிறாரா? மரணவரியை வசூலிக்க, சுடுகாட்டிலே கொட்டகைபோட்டுக்கொண்டு சுப்பிரமணியம் உட்காரப் போகிறாரா? வருமான வரியை வசூலிக்க, பேங்குக் கட்டடத்திற்குப் பக்கத்தில் குடை பிடித்துக் கொண்டு பண்டித நேரு நிற்கப் போகிறாரா?" என்று நாமும் முட்டாள்தனமாகக் கேட்கலாம். ஆனால் நாட்டுக்கு ஒரு முட்டாள் போதுமென்பதால் நாம் கேட்காமல இருப்போம்.

ஃ

ஒரு முறை நான் "மந்திரிகக்கன் அவர்கள்" என்று எழுதிய எழுத்து, அச்சுப் பிழையாக "கந்திரி மக்கன் அவர்கள்" என்று விழுந்துவிட்டது. அச்சுப் பிழை கூட நியாயமாகத்தான் விழுந்திருக்கிறது என்பது இப்போது புரிகிறது. 'ஆகாஷ்வாணி' என்பது இந்திச் சொல் அல்லவாம்; கன்னடச் சொல்லாம். என்ன அறிவு! எவ்வளவு பெரிய ஆராய்ச்சி! கன்னடக்காரனே, அது வடமொழிச் சொல் என்கிறான். வடமொழியாளர்கள் எல்லோருமே அதை ஒப்புக்கொள்கிறார்கள். மூன்றாம் வகுப்பிலே மூன்று வருடம் 'கோட்" அடித்த சிவஞானமுக்கனுக்குத்தான் அதைக் கன்னடச் சொல் என்கிறார்கள். "ஐயா! நீங்கள் தமிழைக் கெடுத்தது போதும். கன்னடத்தையும் கெடுக்காதீர்கள்!" என்று மைசூர்ப் பெருமக்கள் மனுச் செய்ய வேண்டுகிறேப!

ஃ

"வாய்க்கரிசி போடுவது தமிழ்ப் பண்பில்லை!" என்கிறது "கல்கி". போடப்பட்ட வாய்க்கரிசியைப் பொறுக்கிக்கொண்டு போகும் கூட்டத்திற்கு, தமிழ் மரபுபற்றி என்ன தெரியும்? மறவர்கள் போருக்குப் போகும் போது, வாய்க்கரிசி வாங்கி அதை வேட்டியிலே முடிந்து கொண்டு போவார்கள். இனறைக்கும் பரதவர்கள் கடலிலே மீன் பிடிக்கப் போகும்போது வாய்க்கரிசி வாங்கிக் கொண்டு போவதை ஒரு நண்பர் குறிப்பிட்டு எழுதியிருக்கிறார். வீரர்கள் வாய்க்கரிசி வாங்குவது என்பது சாவுக்கஞ்சாத் தன்மையைக் குறிப்பது. செத்துப் போனவன் பெயரைச் சொல்லி, திவசத்தில் அரிசி வாங்குவது மட்டும்தான் "கல்கி"க்குத் தெரியும். வீர மறவர் கதையில் வாய்க்கரிசிக் காட்சி வந்தே தீரும். உஞ்ச விருத்திகள் அதைப் புரிந்துகொள்ள நாளாகும்.

★ ★

ராஜபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
...சங்குபிள்ளை ...திண்டுக்கல்ரோடு, மதுரை.

★ ★

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

சருக்கத்தில் கை கட்டிக்கொண்டு நிற்கவைக்கிறான். இந்தச் சிறு சம்பவத்தைக் கவனிக்க வேண்டும். வீரர்களைக் கோழைகளாக்குவது, அவர்கள் செய்யும் தவறு. ஆனால் அதே நேரத்தில் தவறைச் செய்துவிட்டுக் கோழையாவதைவிட, அந்தத் தவறைச் செய்துவிடாமல் ஒதுங்கி நிற்க ஆசைப்படுகிறவன் உயர்ந்த வீரனே!

கட்டபொம்மன் என்பவனும் ஒரு வீரன்; மருதுபாண்டியர்களும் வீரர்கள். இரண்டு படங்களையும் விமர்சித்த சிலர் "கட்டபொம்மன் முழு வீரனாகக் காட்சியளிக்கிறான். மருது பாண்டியர்கள் கோழைகளாகக் காட்சியளிக்கிறார்கள்!" என்கிறார்கள். ஒரு கேள்வி மட்டும் நான் கேட்பேன். கதையின் ஆரம்பத்திலேயிருந்து "பார்த்துவிடுகிறேன் வெள்ளைக்காரர்களை! கொன்று குவித்துவிடுகிறேன்!" என்று காட்சிக்குக் காட்சி கதறுகின்ற கட்டபொம்மன், கோட்டையை இழந்து, கோட்டைக்குள்ளேயே பெண்டாட்டி பிள்ளைகளையும் விட்டு விட்டு, கொல்லை வழியாகக் காட்டுக்குள் ஓடுகிறானே - இது என்ன குணம்? காட்டுக்குள் அவன் ஓடுகிற காட்சி வருகிறபோது அதற்குமுன் கதை முழுவதிலும் அவன் கதறிய கதறலெல்லாம் கோழைக்கு வந்த இழுப்பு வலி என்றுதானே தோன்றுகிறது. சத்தம் போட்டுவிட்டுத் தலைமறைவாவது எப்படி வீரமாகும்? அதைவிட, "சண்டை வராமலிருக்காதா? எப்படியாவது இதைத் தடுத்து நிறுத்திவிடமாட்டோமா?" என்று ஆரம்பத்திலேயே முயற்சிக்கிற பாத்திரம் செம்மையான படைப்பில்லையா? இமயம் முதல் குமரி வரையிலே- இந்த இரண்டொரு பாளையங்களைத் தவிர-அன்று கையிலே வைத்துக் கொண்டிருந்தார்கள், வெள்ளையர்கள். 1000-க்கு மேற்பட்ட பீரங்கிகளும், பல்லாயிரக் கணக்கான துப்பாக்கிகளும் அவர்கள் கையிலே இருந்தன. பாஞ்சாலங்குறிச்சியைப் போல் பதினைந்து மடங்கு பெரிதான மைசூரை-கட்டபொம்மனைவிட நூறு மடங்கு அதிக வீரம் படைத்த திப்பு சுல்தானை, அதற்கு இரண்டாண்டுகளுக்கு முன்னேதான் அழித்து ஒழித்திருந்தார்கள், அவர்கள். இந்தச் சூழ்நிலையில் சரியான எல்லைப் படம் கூட இல்லாத, முறையாகப் பழக்கப் பெற்ற படைகளும் இல்லாத பஞ்சப் பாஞ்சாலங்குறிச்சியின் தலைவன் எப்படி இருந்திருக்கமுடியும்? சரித்திரத்தில் அந்த மனிதன் நடத்திய உண்மையான சம்பவங்கள் என்னென்ன வருகின்றன? எந்தெந்த நேரங்களில் அவன் ஆத்திரம் கொண்டு எழுந்திருக்கிறான்? எத்தனை தடவை அவன் சமாதானத்திற்கு ஓலை அனுப்பியிருக்கிறான்? சரித்திரம் காட்டும் இந்த உண்மையையும், நாடகக் கட்டபொம்மனின் மூச்சுவிடாத பேச்சையும் கொஞ்சம் கவனித்துப் பார்ப்போம்.

அடுத்த இதழில்...

...ரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு

தொல்காப்பியச் சுவை

இராம. இராமநாதன்
பி.ஏ. (ஆனர்சு)

உ. களவியல்.

...பாவம் ...து உயர்ந் ... கருத்து. ...ள்ள நல் ... ...து ...ய த் ...ஒரு பகுதி. ... செய்தல் ...டுதல், பாவச் ...ல் என்பது ...புக் கொள்ளப் ...ட உண்மை. ...த் தகைய ...கொடிய செயல் எவ்வாறு பழம் ...பெரும் இலக் ...ணத்தில் ஒரு ...தியாக அமைய முடியும்? கள ...தல் கண்டிப்புக்குரிய செயல். ...மையிலேயே இந்தச் செயல் ...பட வேண்டும். 12 வயதிற் ...ட்ட பெண் களவு செய்தால்? ...போல் 16 வயதிற்குட்பட்ட களவு செய்தால்? திருத்த முடியாது; பொறுக்கவும் இய... இவ்வாறான எண்ணம் ...டுதல் இயல்பே.

...ருடைய-பிறருக்கு உரிமை ...பொருளை அவர் அறியா ...ணம் கவருதல் தவறேயாகும். ... மட்டுமல்ல; தண்டனைக்குரி ...மாகும். களவு செய்தல் ...மையல்ல என்றாலும் தொல் ...பியர் களவு செய்தல் வேண் ..., களவுதான் வாழ்க்கைக்கு ...ப்படை என்று கூறுகிறார். பிற ...கு உரிமையான பொருளை ...ற்குரியவர் அறியாமல்எடுத்துச் ...ல்லுதல் திருட்டு ஆகும். அத்த ...ய கடும் செயலுக்குக் காவல் ...யங்கள் தண்டிக்கும் நிலை ...டு. இது நாடு அறிந்தது.

ஆனால் ஓர் உயிரை மற்றோர் ...யிர் களவு செய்யின் அது தவறு ...று கூறுதற்கில்லை. ஒருவருக்கு ...ய பொருளை மறைவாக அவர் ...யாமல் கொள்ளும் நிலை ...இல்லை. உயிரற்ற பொருளுக்கு ... பொருளுக்கு அதனை ... ஆற்றல் இன்மையால் ...விற் கோடல் திருட்டு ... ஆனால் 16 வயதுடைய ... 12 வயதுடைய பெண் ... தம்மைத் தாம் நன்குணரும் ...ல்புடையார். அவரிடையே ...படும் களவு திருட்டு ஆகாது, ...பார்.

தமிழகத்தில் சங்க காலத்தில் பத்து வகையில் ஒத்த குண நலன் களுடையார் இருவர் - ஆணும் பெண்ணும்-கண்ணால் கண்டு பேசி உள்ளத்தால் ஒன்றிப் பின் களவுப் புணர்ச்சியில் ஈடுபவர்; இன்பங் காண்பர். இச்செயலைப் பெற்றோரோ, மற்றோரோ அறியமாட்டார்கள். அவ்வாறு மறைவாகக் கொள்ளும் நட்பு, களவு எனப்படும். திருட்டுத் தொழிலினின்று வேறுபட்டது ஆகும். ஒத்த மனம் உடையாரே ஒன்றுபட்டுக் களவுப் புணர்ச்சியில் ஈடுபடுவதால் அது திருட்டு ஆகாது. பெற்றோர் அறியாமல் அவர்க்குரிய பெண்ணைக் காதலித்தல் களவுதான். ஆனால் வயது வரப்பெற்ற அப்பெண்ணின் ஒப்புதல் பெற்றே விரும்புதலால் திருட்டு ஆகாது. இதனை அக்கால மக்கள் வாழ்வியலைத் தொடங்குதற்கு ஏற்ற அடிப்படையாகக் கருதினர். இதற்கு ஏற்ற காரணம் இருத்தல் வேண்டும். திருமணம் நடைபெறும் முன்னர் இருவரும் மனத்தால் ஒன்றியிருப்பின், மணந்தோன்று உள்ளம் வேறுபடாது.

மணக்கும் முன்னர் இரு வேறுபட்ட உள்ளங்கள் முன்பின் அறியாமல் பெரியோர் முடிவுக்கேற்ப மணந்து உள்ளம் ஒன்றாமல் "தலைவிதி" என்று வாழ்தல், மக்கள் இனம் செய்யும் அடிப்படைத் தவறுகளுள் ஒன்றாகும்.

களவு செய்தல் இன்றைய நிலையில் பயன் தருமா? என்பது அடுத்த ஐயம். களவு செய்தல் என்றைக்கும் உண்டு, அதுவும் மனம் ஒன்றுபட்டோர் மாட்டே நிகழும் சிறப்பு மிக்க செயல். அதை விட்டுத் கண்டோரைஎல்லாம் காதல் உடையவர் என்ற கருதுதல் அறிவுக் குறையாகும். அதுபோல் ஒரு மகன் ஒரு மகளைப் பார்த்துக் காதல் கொண்டு மயங்கி இருக்கலாம். அம்மகளோ இவனை மாட்டுக் காதல் இன்றி இருக்கலாம். அப்போது அது கைக்கிளை என்று மறுக்கப்படும். வயதுமிக்கோர் குறைந்தோர் மாட்டுக்காதல் கொள்ளுதல், பெருந்திணை என்று ஒதுக்கப்படும். விருப்பம் இல்லாதார் கொள்ளும் உறவு நேர்மைக்கு மாறாகக் கருதப்பெறும்.

களவு எவ்வாறு வாழ்வியலுக்கு அடிப்படையாகும்? களவில் உறவு கொண்டோர் அவ்வுறவினை வளர்த்துப் பெற்றோர் அறிய, உற்றோர் அறியக் கொள்ளும் உறவே-கற்பு வாழ்வே உலகம் அறியுமாறு மக்கள் தொடங்கும் மாண்புடை வாழ்வாகும். எனவே வாழ்வு என்றாலே இல்லறம் - இல்லறமே கற்பு வாழ்வு என்பது ஆகும். கற்பியலுக்கு அடிப்படை, களவியலே யாகும்.

களவில் உறவு கொண்டோர் மீட்டும் கற்பு மணமபுரிந்து வந்தனர். இவ்வியல்பு இடைப்பட்ட காலத்தில் கைவிடப்பட்டுப் பொய்யும் வழுவும் மலிந்த வேளை தான் தாலி கட்டும் வழக்கம் வந்தது என்பதைத் தொல்காப்பியர்...

"பொய்யும் வழுவுந்
தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர்
கரணம் என்ப"

—(தொல். பொருள். 143.)

என்கிறார்.

களவியலைப் பற்றிய பொதுக் கூறுகளை அறிந்த நாம், அதன் வழி முறைகளையும் அறியவேண்டுவது இன்றியமையாதது. நம் தமிழ்ச் சமுதாய முறைகளையும் நடைகளையும் அறிந்தவர் என்ற காரணத்தால் தொல்காப்பியர் இவ்வேறுபாட்டினை நன்கு கூறுகிறார். ஆரியப் பழக்கத்தில் காணப் படும் கந்தருவம் இம்முறையோடு ஒத்தது எனலாம். ஏனைய ஒன்பது முறைகளும் பெருந்திணை அல்லது கைக்கிளையின்பாற் படும். தமிழ்ப்பண்பும் இயல்பும் தனித் தன்மை வாய்ந்தன.

இன்பம் என்பது மனிதன் தான் விரும்பியவுடன் பெற்றிடும் பொருள் அல்ல, மனம் ஒத்தார் மாட்டே அந்த இன்பத்தைப் பெற முடியும். கற்புமனம் கொண்டோர் மனைவி மாட்டும் உள்ளம் ஒன்றுவிட்டால் இன்பம் இல்லை;பரத்தையேயாயினும் மனம் ஒன்றினால் இன்பமுண்டு என்பதை,

"எல்லா உயிர்க்கும்
இன்பம் என்பது
தான் அமர்ந்து
வருஉம் மேவற்றாகும்"

—(தொல். 219.) என்கிறார்.

உலகியல் உண்மையை கி. மு. 4-ம் நூற்றாண்டில் தமிழினம் அறிந்து கடைப்பிடித்தமை நாகரிகத்தின் உயர்வைக் காட்டுகிறது.

களவியலில் ஒத்த பத்துக் குணங்கள் உள்ள தலைவன் தலைவியர் இருவரிடமே காதல் உண்டாகும் என்றார். முதன் முதலில் தலைவன் தலைவியைக் கண்டவேளை அவளைத் தெய்வமோ என்று ஐயுறுவானும் தலைவி அச்சம் காரணமாக ஐயங்கொள்ளமாட்டாள். கண்ட பின்னர் கண்கள் பேசத் தொடங்கும். தலைவி உள்ளம் ஏற்றால்தான் மேற்கொண்டு குறிப்புரை நிகழும் என்பதைத் தொல்காப்பியர்...

"குறிப்பே குறித்தது
கொள்ளு மாயின்
ஆங்கவை நிகழும்
என்மனார் புலவர்

—(தொல். 94.) என்றார்.

தலைவன் பெருமையும் ஆண்மையும் உடையவன்;என்றாலும் தலைவியிடம் அவன்தான் முதலில் பேசுதல் முறை என்பார். பெண் மகள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு உடைவள். இவர்கள் இருவரும் தங்கள் தங்கள் காதலை ஒட்டி ஒவ்வொன்றாய் இழத்தல் உண்டு. வாழ்வு முழுதும அல்ல, அவ்வேளைக்கு மட்டும்தான். தலைவி எக்காரணம் பற்றியும் பேசாள் என்பதை...

"நன்னுது வேட்கை
கிழவன் முற் கிழத்தல்
எண்ணுங் காலைக்
கிழத்திக் கில்லைப்
பிறநீர் மாக்களின்
அறிய ஆயிடைப்
பெய்ந்நீர் போலும்
உணர்விற் றென்ப"

—(தொல். 116.) என்று கூறுகிறார்.

உயிரினும் நாணம் சிறந்தது. நாணத்திலும் குற்றமற்ற கற்புச் சிறந்தது. அதனால் கற்பைக் காப்பாற்றுவதற்காக நாணத்தைப் பெண் இழக்கலாம என்கிறார். இதனை...

"உயிரினும் சிறந்தன்று
நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக்
கற்புச் சிறந்தன்றெென"

-(தொல். 111.) என்று கூறுகிறார்.

— 9-ம் பக்கம் —

★ ★ ★

காதல் நினைவு!

நெஞ்செனும் வீணையினை-அவள்
நினைவெனும் மலர்க்கரம் தழுவையிலே
அஞ்சிலம்பதிர வந்தே-என
தாவியில் மேவிடும ஆருயிராள்
செஞ்சுடர்ப் பகுதியளாம்-நறுஞ்
சீதளத் தாமரைச் சிரிப்பினளாம்
விஞ்சையர் எழில ந்தாம-இள
வேனிலின் தேனலக காவியமாம்.

காதலின் பெயரினள்காண்-அவள்
கனிச்சுவை மழலையும் செந்தமிழ்காண்
போதினை அவிழ்ப்பவள் காண்-அதில்
பூவிழை சுரும்பினைப் புதைப்பவள் காண்
வேதனைக் கடலினிலே-அவள்
விழித்திறன் கலங்கரை விளக்கதுவாம்.
மாதவள் நினைவினிலே-இந்த
மாநிலம் எனக்கொரு சிறுதுரும்பாம்.

—முத்துநிலா.

முகவரி மாற்றம்

பெரம்பூர்த் தொகுதி மக்களின் வசதிக்காக 17-6-'59 முதல் எனது இல்லத்தைக் கீழ்க்காணும் முகவரிக்கு மாற்றியுள்ளேன். தொடர்பு கொள்வோர் இனி இந்த முகவரிக்கே தொடர்பு வைத்துக் கொள்ளவும்.

—சத்தியவாணிமுத்து எம். எல். ஏ.,

முகவரி :

24-C, ஹைதரி தோட்டம்,
கிருஷ்ணதாஸ் ரோடு,
B. & C. மில்காண்டின் சமீபம்,
சென்னை-12.

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

போலும்! அவரின் அவசரப் பேச்சுக்களுக்காக அனுதாபப்படுவோம்; மன்னிப்போம்; மறப்போம் - அறிஞர் அண்ணாவின் ஆணையிருப்பதால்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டு விடுதலைக் கொள்கையைப் பற்றி ஏதாவதொரு கருத்தைச் சொல்லாவிட்டால் அகில இந்தியத் தலைவர்களுக்குத் தூக்கம் வருவதில்லை! புது டில்லியிலேயிருக்க வேண்டிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோத் தலைவர்கள் அனைவரும் திருவனந்தபுரம் சென்றார்கள். திரும்பிய வழியில் அஜய்கோசும் ரணதிவேயும் மதுரையில் பேசினார்கள்! இவர்கள் இருவரும் கேரள அமைச்சர்களைக் கவிழ்ந்துவிடாமல் கவனித்துக்கொள்ளக் கேட்டுப் பொதுமக்களுக்கு நிறையப் பேசியிருக்கலாம். ஆனால் முன்னேற்றக் கழகத்தைப் பற்றியே பேசினார்கள். நிருபர்களிடம் பேசிய அஜய்கோஷ் "முன்னேற்ற கழகத்திற்குச் செல்வாக்கில் சென்னைவெற்றிஅதனுடைய கொள்கைகளுக்காக அல்ல; காங்கிரசின்மீதுள்ள வெறுப்பினால்தான்" என்று திருவாய் மலர்ந்தார்! கம்யூனிஸ்ட் கட்சியின் மாவீரனுக்கு ஏன் இந்தக் கவலை, கழகத்தின் வலிவைப் பற்றி? கழகத்தின் கொள்கைகள் என்ன என்றே தெரியவில்லை என்பதாக, தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் பேசுவது வழக்கம். இது கழகத்தின் திறமைக் குறைவா, கம்யூனிஸ்ட்களின் அரசியல் அறிவின் தரக் குறைவா என்பதை மதிப்பிட வேண்டியவர்கள் பொதுமக்கள்தாம். ஆனால் அஜய்கோஷ் கழகத்தின் இலட்சியங்களைத் தெரிந்துகொண்டவர் என்று நான் நம்பத் தயாராக இல்லை அவர் சென்னை நகரசபைத் தேர்தலை மனதில் கொண்டுதான் பேசியிருக்க வேண்டும். நகரசபைத் தேர்தலில் கழகத்தின் அரசியல் கொள்கைகள் பிரச்னைகளாக வைக்கப்படவில்லை. ஆனால் நகரசபையில் கழகம் பெறும் வெற்றிகள் வருங்காலத்திலும் கொள்கைப் பிரச்னைகளாகவே இருக்க முடியும் என்பதை எவரும் எளிதில் உணரலாம்! கழக இலட்சியங்களிலே சென்னை மக்களுக்கு நம்பிக்கையில்லையென்றால் கம்யூனிஸ்ட்களை அவர்கள் காலையும் வாரிவிட்டு வேடிக்கை பார்த்திருக்கமாட்டார்கள்! சென்னை நகரத்தில் 100 இடங்களுக்குப் போட்டியிட்ட காங்கிரசை எதிர்க்கும் திறமை அஜய்கோஷின் கட்சிக்கு ஏன் வரவில்லை? கழகத்தின் கொள்கையிலே பற்றில்லை; இலட்சியத்திலே நம்பிக்கையில்லையென்றால் கம்யூனிஸ்ட்களால் அந்த இடத்தை எப்போதாவது கைப்பற்ற இயலுமா? மேடையிலே ஆடத் தெரியாதவள் தெருக்கோணல் என்பாளாம் என்றோர் பழமொழி உண்டு. அதற்கோர் சிறந்த சான்றாக நிற்கிறார் அஜய்கோஷ் என்ற அப்பாவி மனிதர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி மதுரைப் பொதுக்கூட்டத்திலும் காரைக்குடி மாநாட்டிலும் ரணகளச்சூரன் ரணதிவே பேசும்போது "இன்று சில பிற்போக்காளர்கள்—தி. மு. கவினர், வடக்கு தெற்கு என்று நாட்டைப் பிளவுபடுத்தும் பிரிவினைக் கொள்கையை — தற்கொலைக் கொள்கையைப் பேசி வருகின்றனர்" என்ற அருமையான கருத்துக்களைச் சொன்னார். கம்யூனிஸ்ட்களுக்கு ஒரே பூரிப்பும் மகிழ்ச்சியும்; அதற்கு அளவில்லை! ரணதிவேயைப்போன்ற கொரில்லாப்போர்வீரர்களுக்கு, தெலிங்கானாப் போராட்டமென்று சொல்லி, பாமரப் பாட்டாளிகளின் செங்குருதியிலே விளையாடியவர்களுக்கு, சதிச் செயல்களிலே சிக்கிச் சங்கடப்பட்டவர்களுக்கு, ரஸாக்கர்களின் கூட்டுறவிலிருந்து கொண்டு கட்சிக் கொள்கைகளைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டுப் பெண்களின் பிணங்களைத் தேடி அலைந்தவர்களுக்கு, முன்னேற்றக் கழகத்தவர் பிற்போக்குவாதிகளாகத் தென்படுகிறார்களாம். இந்தக் குற்றச்சாட்டினை ரணதிவே நம்மைப்பற்றிச் சரியாகத் தெரிந்துகொள்ளாத காரணத்தால் இந்திராதேவியின் பாணியிலே பேசியிருந்தால் நம்மால் மன்னிக்கத்தக்கவராகிறார். அல்லது ராமமூர்த்தி, அய்யங்கார், வெங்கட்டராமன்போன்ற அகில உலகத் தலைவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு கழகத்தை இவ்விதம் மதிப்பிட்டிருந்தால் இவரையும் பத்தாண்டுகளுக்கு முன்னால் தன்னுடைய பொதுச் செயலாளராக வைத்திருந்த கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தரக் குறைவை எண்ணித்தான் நாம் வருந்தவேண்டும். சொந்த நாட்டைப்பற்றியும் நாட்டு மக்களைப் பற்றியும், இனத்தைப்பற்றியும் இலக்கிய இலக்கணங்களைப்பற்றியும் இதயத்திலே இலட்சியங்களை வளர்த்துக் கொண்டு வடநாட்டு ஆதிக்க வெறியர்களை விட்டு விடுதலை பெறப் பணியாற்றுவது ரணதிவேக்குப் பிற்போக்குத்தனமாக இருக்குமென்றால், அவரைப்போன்ற கம்யூனிஸ்ட்களுக்கு அவர் தம் தமிழ் நாட்டு அடிமைகளுக்குச் சொந்த நாடில்லை, மொழியில்லை, கலையில்லை, இலக்கியமில்லை, இன வரலாறுகள் இல்லையென்பதைத்தான் தெரிவிக்கிறார்கள்! கழகத்தை எதிர்த்துப் போராட வேண்டுமாம்! நாங்கள் 'தமிழ் வாழ்க' என்கிறோம். கம்யூனிஸ்ட்களே! நீங்கள் ரணதிவேயின் கால் பிடித்துப் பிழைப்பதாக இருந்தால் 'தமிழ் ஒழிக, வீழ்க' என்று முழக்கமிடுவீர்களா?

திராவிட முன்னேற்றக் கழகம் வடக்கு-தெற்கு என்று பேசுவது நாட்டைப் பிளவுபடுத்துவதாகும் என்றும்கூட ரணதிவே சொல்லியிருக்கிறார். ஐந்தாண்டுத் திட்ட வஞ்சனையை, இந்தி மொழி ஆதிக்கத்தை, வடநாட்டு டில்லி சர்க்கார் வைத்திருக்கும் பாரபட்சமான கொள்கையால் தென்னாட்டைப் புறக்கணிப்பதை, கம்யூனிஸ்ட் ரணதிவே ஏற்க மறுக்கலாம்! அதனால் வடக்கு-தெற்கு விவகாரங்கள் அவருடைய கம்யூனிஸ்ட் கட்சியிலே உண்டா இல்லையா என்று கேட்க நமக்கு உரிமையுண்டு! வடக்கு-தெற்கு பேதம் கூடாதென்றால் அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குத் தலைவர்கள் வடக்கிலேயே தயார் செய்யப்படுவது ஏன்? பொதுச் செயலாளர் பதவிக்கு பி. ஸி. ஜோஷி-ரணதிவே-அஜய்கோஷ் என்ற வடநாட்டு நபர்களே தொடர்ந்து வருகிறார்களே! ஏன்? ஜீவானந்தம்-கந்தசாமி-கல்யாணசுந்தரம் போன்றவர்கள் வர முடிவதில்லை! ரணதிவே சொல்வதுபோல வடநாட்டு ரத்தமும் தென்னாட்டு ரத்தமும் ஒன்றாக மதிப்பிடப்பட்டால், ஜீவானந்தம் கருதுவதுபோல வடநாட்டுக் குப்பனும் தென்னாட்டுச் சுப்பனும் ஒன்றாக மதிப்பிடப்பட்டால் ஏன் வடநாட்டு அஜய்கோசும் தென்னாட்டு ஜீவானந்தமும் ஒன்றாக மதிக்கப்படுவதில்லை? ரணதிவே வகித்த பொதுச் செயலாளர் பதவி ஏன் ராமமூர்த்திக்குத் தரப்படவில்லை? இதற்குப் பெயர் வடக்கு-தெற்கு இல்லையா? கம்யூனிஸ்ட் கட்சியிலேயே வடக்கு தெற்குப் பிற்போக்குத் தனத்தை வளர்த்துக்கொண்டிருக்கும் ரணதிவேக்கள் முன்னேற்றக் கழகத்தவரைப் பிற்போக்கு வாதிகள் என்பது மூளைக் கோளாறென்று நான் சொல்லத் தயாராக இல்லை; ஆனால் தென்னகத்தைப்பற்றி, இங்குள்ள மக்களின் எண்ண வளங்களைப்பற்றி, அதனை செழுமைப்படுத்தும் முன்னேற்றக் கழகத்தைப்பற்றி அவர் நல்ல முறையில் தெரிந்துகொள்ளாதது அவர் தவறென்று எடுத்துக் காட்டுவது என் கடமையாகிறது. ரணதிவேயைத்தான் கம்யூனிஸ்ட்கள் கலவரத் தலைவன் என்று முடிவு கட்டிச் செயலாளர் பதவியிலிருந்து விரட்டியடித்து, அஜய்கோஷைப் பதவியில் நிறுத்தினார்கள்! அந்த லாயக்கற்ற தலைவர் ரணதிவே, கழகத்தைப்பற்றிப் பேசுவது கம்யூனிஸ்ட்களுக்குக் களிப்பைத் தருகிறதா?

திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாயர்கள் கண்டித்துப் பேசியபின் தமிழ்நாட்டுச் செயலாளர் வெங்கட்டராமன் என்பவர்-மாஸ்கோ சென்று மாலங்கோவைக் காணுமல் திரும்பிய மாவீரர், பின்வரும் தீர்மானத்தை, அரசியல் அறிக்கையில் தெரிவித்துள்ளார். "நாட்டுப் [...] கோஷம் எவ்வாறு ஜனந [...] திசை திருப்பிவிட்டுப் [...] படுத்துகிறதென்பதைப் [...] புணர்ச்சி மிக்க தமிழ் ம[...] தெளிவுபடுத்தி[...] வர [...] இந்தப் புது யு[...] நீண்ட நாள் உறக்[...] கடைசியில் காரைக்குடி [...] தினம் இரவு பனிரெண்டு [...] அளவில்தான் இதனை எழுதி[...] திருக்கவேண்டும், வெங்கட்ட[...] சாதாரண மூளை ஓட்டங்க[...] இத்தகைய பொன்னான கரு[...] கள் கிடைக்கமாட்டா! 'தி[...] நாடு திராவிடருக்கே' என்ற நா[...] பிரிவினை முழக்கம் எப்படி ஜனந[...] கத்தைத் திசை திருப்புகிறது எ[...] பதை தமிழ்நாட்டின் நிரந்தரச் [...] லாளர் சரியானபடி விளக்கவி[...] நாடு பிரிந்து, மொழி வள[...] இனம் மகிழ்ந்து கூட்டாக [...] தான் மக்களாட்சிப் பண்புக்[...] செயலென்று கழகத்தவர் [...] கிறோம். டில்லியிலிருந்து பு[...] பெறப் போராடுவது கழக[...] என்கிறோம். இது ஜனநா[...] மறுப்பதாகுமா? மறந்து வ[...] தாகுமா? மாஸ்கோ சென்று [...] பிய சர்வாதிகார மயக்கம் [...] தெளியவில்லையா? தமிழ்[...] கம்யூனிஸ்ட்கள் கட்டில் க[...] போல் நான்கு பேர் இருக்[...] என்பதுதான் தமிழ்நாட்டில் [...] வாய்ந்த நல்லவர்களுக்குத் [...] முன்னேற்றக் கழகம் இந்த [...] விடுதலை இயக்கம் என்பதைச் [...] னிஸ்ட்களைக் காட்டிலும் அதி[...] சிறந்த முறையில் தமிழ[...] பொதுமக்கள் தெரிந்து வை[...] ளார்கள்! கொள்கை [...] களிலே திளைத்து எதையும் [...] கொள்ளாமல் திடுதிடுவென்று [...] மலை உச்சிக்கே ஏறிக் கூ[...] போட்டுவிட்டு கூண்டோடு [...] விட்ட கம்யூனிஸ்ட்களுக்குத் [...] வுண்டா-கழகத்தைப்பற்றித் [...] வாகப் பேசக்கூடியவர்கள[...] பதையெல்லாம் பொலிட் பீ[...] தலைவர்கள் ஒன்றாக [...] ஆலோசித்துவிட்டு, கலை [...] மாநாட்டின் காரைக்கு[...] யையும் யோசனைகே[...] ராமன்கள் தமிழ் மக்[...] வரட்டும்-கழகத்தவர் [...] துள்ளோம்.



நூலைப் பற்[...]

டாக்டர் மு. வ. :

"'தணலில் தங்கம்' என்னு[...] இத்தொடர் கதையில் பண்பு[...] சிறப்புற அமைந்து உள்ளது. வாழ்க்கைச் சிக்கலை எடுத்துக் காட்டுவதிலும், அவரவர் மனப்பான்மையைப் புலப்படுத்துவதிலும் இதன் ஆசிரியர் திரு. மா. கி. தசரதன் வெற்றி பெற்றுள்ளார்."

★

வெளியீடு :
வெண்ணிலா வெளியீடு
சி. காஞ்சிபுரம்.

விற்பனை உரிமை:
"தென்றல்", சென்னை-6.
தனிப்பிரதி விலை ரூ. 1-50.
தபால் செலவுடன் ரூ. 1-60. விற்பனையாளருக்குக் கழிவு 20%.
தேவையுள்ள விற்பனையாளர்கள் "தென்றல்" முகவரிக்கு எழுதுக.

புதிய பாரத மாதாவும் தெலிங்கானு வீரரும்

...ட முன்னேற்றக் கழகமும் ...ன் தலைவர் அண்ணாவும் இந்தி மொழியாவதை ஏற்றுக் ...டுவிட்டதாக கௌகத்தி ...ரஸ் மாநாட்டில் ஒரு பெரும் ...யைச்சொன்னார் சுப்பிரமணியம் காங்கிரஸ் அமைச்சர். அவர் ...ம் ரகத்து வக்கீல் வேலைக்கு ...கானவர்! திராவிடர் கழகத்துத் ...ான இந்து பகுத்தறிவு வாதி ...ன்னேற்றக் கழகம் இந்திக்கு ...ரவு தந்துவிட்டதாகவே கெடு ...ப பணி புரிந்தனர்! தென்னாட் ...ல கழகத்தவருக்குச் சமாதானம் ...ல்லத் துணிவு பெறுகிறவர்கள் ...ப சர்க்காரும் நேருவின் ஆசை ...ரசாதின் அன்பும், இந்தி வலுக் ...யமாகத் திணிக்கப்படமாட் ...ன்றுதான் ஆறுதல் சொன் ... பாராளுமன்றத்து விவாதத் ...ந்தி வெறியர்கள் நேருவைத் ... விட்டார்கள், முன்பு ஒரு ... இந்தி ஆதிபத்திய மாளி ... விரைவில் கட்டி முடிக்க ...மென்று பேசிய லீலாவதி ...என்ற அம்மையாரைப்போல! ...ம் மற்றவர்களும் மொழிப் ...யைப் பாராளுமன்ற உறுப்பி ... அடங்கிய குழுவின்முடிவுக்கு ...னார்கள். அந்தக் குழு தன் ...ன இப்போது சொல்லிவிட் ...965-ம் ஆண்டிற்குப் பின் ...ன இந்த நாட்டின் ஆட்சி ...ாக இருக்கவேண்டுமென்று! ...த மாற்றமும் ஏற்றுக்கொள் ...வில்லை! தென்னகத்து அரசி ...றிஞர்கள்—மொழிப் பேராசிரி ... தெரிவித்த கண்டனங்களை ...வில்லை. அகில இந்தியக்கட்சிக் ...ள் காங்கிரசாரும்-கம்யூனிஸ்ட் ...ம தங்களின் தென்னகத்துத் ...கப் பற்றுதலுக்குச் சான்றாகச் ...பல்பட இந்தி ஆதிக்கத்தை ...க்கத் தயாராகவில்லையே ஏன்? ...நாட்டுக் கங்கானிகள் என்று ...ல்லலாம். டில்லிக்குத் தலை ...ங்கும் அடிமைக் கட்சியினர் ...ருல்கூட கோபித்துக்கொள்ள ...டார்கள்! தமிழ்நாட்டின் இயக்க ...மொழி வளமும் நாங்கள் அறிந் ...தான். எங்களுக்கும் இலக்கிய ...தயாகும் தகுதி உண்டு என்று ... "புதுமைப் பெண்கள்— ...விநயங்கள்" இந்தி நுழை ...மிழ் மாண்பும் மதிப்பும் ...து போகும் என்ற உண்மையை ...னும் ஏற்றுக்கொள்ளத் தொடை ...ங்குவது தகுமா? எத்தனையோ ...ங்கிரஸ்காரர்கள் பட்டீல்போன்ற ...ங்கிரஸ் அமைச்சர்கள் இந்தி ...திக்கத்தை விரும்பவில்லை. ஆங் ...லம் வேண்டுமென்றார்கள். ஆனால் ...ாமராசர்களும் கக்கன்களும் ...மொழி' என்றால் குளறுகிறார்கள். ...றிரேன்முகர்சி என்ற மாபெரும் ...ம்யூனிஸ்ட் தலைவர் சவ மொழியான ...சமஸ்கிருதம்' தேசிய மொழியாக ...வேண்டும் என்று பேசியுள்ளார்- ...வெங்கட்டராமன்களே! அய்யங் ...கார்த் தோழர்களே! உங்கள் கருத் ...தென்ன?

திராவிட முன்னேற்றக் கழகம், பி. ஜி. கேர் தலைமையில் வந்த பொது மொழி கருத்தறியும் குழுவின ...ருக்குத் தன் கண்டனத்தைத் தெரி ...வித்தது. பொது மொழியாகத் தகுதி பெற்றது இந்திதான் என்ற முடிவினை அன்றையத் தினம் குழுவில் ஒரு உறுப்பினராக இருந்த டாக்டர் பி. சுப்பராயன் ஏற்றுக்கொள்ளாமல் தன் மறுப்பினைக் குறித்து வைத்தார். அதே டாக்டர் இப்போதும் பாராளு மன்றக் குழுவிலே இடம் பெற்றவர். இந்தி 1965-ம் ஆண்டில் ஆட்சி மொழியாகும் என்பதனை ஏற்றுக் கொண்டுள்ளார். தென்னாட்டின் சார்பில் குழுவில் இடம் பெற்ற சுப்பராயனும், டாக்டர் ஏ. இராமசாமி அவர்களும் எந்த வித மறுப்பும் தெரிவிக்காமல் ஆதரித்துவிட்டனர். இவர்களைத் தமிழ் மன்னனுக்குச் சொந்தமானவர்கள் என்று சொல்லவே நாம் வெட்கப்பட வேண்டும்! இந்தியை எதிர்த்துப் பிராங் அந்தோணி-குழுவின் கருத்துக்களை மறுத்திருக்கிறார் - ஆனால் அறிஞர் அண்ணா பல ஆண்டுகளுக்கு முன்பே சொன்னதுபோல இந்த வில்லவன் கோதைகள் தாயகத்தை மறந்து விட்டார்கள்; இந்திக்கு ஆதரவு தந்து விட்டார்களாம்! இவர்களைக் காங்கிரஸ்காரர்கள் மன்னித்தாலும் வருங் காலம் மன்னிக்காது! சமஸ்கிருதம் ஆட்சி மொழிக் குழுவில் இடம் பெற வேண்டுமென்று

கூடலரசன்

துணைக்கண்டத்தின் பல பகுதிகளில் ஆங்காங்கே சில மண்டபங்களில் தர்பார் பொம்மைகளும்-சில நடைப்பிணங்களும், பேசுகின்றன! இதனையும் 'இந்தி'யையும் வளப்படுத்தும் பொறுப்பை டில்லி சர்க்கார் ஏற்றுக்கொண்டுள்ளது! இங்கேயுள்ள அரசர்கள் அதனைப் பெரிதாக மதித்து வரவேற்கிறார்கள்! இந்திப் பண்டிதர்களுக்குப் பண முடிப்புகள் தருவதை டில்லி சர்க்கார் விழாவாக நடத்தி நமக்கெல்லாம் படமாக எடுத்துக் காட்டி, ஏமாளிகளே! தென்னாட்டவரே! "எங்களின் காலுக்கு முத்தமும் தந்து மலர் சொரியும் காங்கிரஸ்-கம்யூனிஸ்ட் கர்ம வீரர்களே! உங்கள் மக்களிடத்திலே எங்கள் செயலைப் புகழ்ந்து பேசுங்கள்!" என்று திமிரோடு தெரிவித்துள்ளார்கள்! இந்தி வெறிபிடித்த தாண்டன் பரிசு பெறுகிறார். இந்தி வேண்டாம்; தமிழ் வேண்டும்-தமிழ்நாடு வேண்டும் என்று கேட்கின்ற நாடகத் தந்தை சம்பந்தனார் அமைச்சர்களிடத்திலே ஆறுதல் வார்த்தைகளைக்கூடப் பெறமுடியவில்லை இவர்கள் தமிழ் ஆட்சி மொழி என்ற திரைக்குப் பின்னாலே பங்கப்பட்ட தங்கள் கங்காணித் தன்மையை மறைத்துக்கொள்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பார்வையில் படாமல் தப்பித்துக்கொண்டு இந்திக்குச் சலாம் போடும் தமிழ் மகனைக் கண்டிப்பதில் தவறில்லை. பிரஜா-சோசலிஸ்ட் தலைவர், பாட்டாளி வர்க்கத்து மாவீரன் பி. எஸ். சின்னத்துரை கட்டாய இந்திக்குக் கட்டியம் கூறுகிறார்; எதிர்ப்போரைக் கண்டிக்கிறார்! டாக்டர் லோகியாவின் இந்தி வெறியைக் கண்டித்த அவருடைய பழைய நண்பர் ஈரோடு சின்னச்சாமி தற்போதைக்கு ஆதித்தனார் பாதையிலே இருக்கிறார். கடந்த காலத்தில் தான் அவரை ஆதிஎத்தன் என்று சித்தரித்ததையெல்லாம் மறந்துவிட்டு! சின்னத்துரைகள் இனி மேலாவது இந்தியை எதிர்க்க வேண்டும்! அகில இந்தியாக்கள்-இந்தி பக்தர்கள் இந்த நிலையிலே இருக்கிறார்கள்! தலையைக் கொடுத்துத் தலைநகரையும் தமிழகத்தையும் காப்பாற்றுவேன். தலை போன பின் வெறும் முண்டமாகத் தமிழ் நாட்டைச் சுற்றி வருவேன் என்றரகத்தில் செய்திகளைச்சொன்ன சிவஞானக் கிராமணி என்பவரை இந்தி ஆதிக்கம்பற்றி உங்கள் சொந்தப் புத்தி என்ன சொல்கிறது என்று கேட்க வேண்டிய கடமை தமிழ் நாட்டுப் பொதுமக்களுக்கு இருக்கிறது! அந்தத் தனிப் பெரு' தலைவர் மறுத்துவிட்டாலும் அன்றோர் நாள் எஸ். எஸ். மாரிசாமி என்பவர் எடுத்துக் காட்டியதைப்போல சிவஞானத்தின் தண்டாமுண்டாக் கழகத் தோழர்கள் இந்தி ஆதிக்கம்பற்றிப் பேச வேண்டும்! சென்னைக் கார்ப்பரேஷன் சாக்கடைத் தண்ணீரில் நீச்சலடித்துக்கொண்டு கழகத்தின் மீது வசை மொழிகள் வீசுவது, இணையற்ற, இருசப்பக் கிராமணி தெருத் தலைவருக்கு வீரமல்ல-விவேகமுமல்ல! கடந்த காலத்தில் எவரெவர்க்கோ எடுபிடியானீர்கள்; எதிர் காலத்தில் எவரெவரின் தோளிலே தொத்திக்கொள்ளலாம் என்று இப்போதே துணிய வேண்டாம். பொதுத் தேர்தல் வருவதற்கு இன்னும் மூன்று ஆண்டுகள் இருக்கின்றன! நீங்களும் திரையுலகத்துக் கம்பன்களும் கட்டபொம்மன்களும் தமிழுக்குச் சேவை செய்வது உண்மையெனில், தாயகத்துப் புகழ் பாடுவது இதயத்தின் ஆசையெனில் கட்டாய இந்தியை எதிர்த்து உங்கள் படை திரட்டுக. ம. பொ. சி. கழகத்தாரே! கட்டாய இந்தி நுழைப்புப் பற்றி உங்கள் கருத்தென்ன? டில்லியினை எதிர்க்கத்துணிவுண்டா? தற்கால எட்டப்பர்களே, பதில் தேவை!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாட்டு விடுதலைப் பிரச்னைக்கு முழு வலிவூட்டுவது டில்லி பாதுஷாக்களின் இந்தி வெறியாகும்! எல்லாத் துறைகளிலும் இந்தியைப் புகுத்துகிறார்கள். "எங்கள் மொழி வாழ என்ன செய்திருக்கிறீர்கள்..." என்று எவராவது எதிர்த்துக் கேட்டால் 'நாட்டுத் துரோகி'யென்று சொல்லி இன்றைய தினம் டில்லிக்குத் தலை வணங்கும் "உடையணத் தேவர்கள்" சுப்பிரமணியம் உருவிலே, பக்தவத்சலம் உருவிலே, இராசாராம் உருவிலே, நம் கண்ணெதிரே தென்படுகிறார்கள்! இங்கிருந்த இறவாப் புகழுடைய இலக்கியங்களையும், இழந்த இன்பங்களையும், மீண்டும் பெற்றுப் புது வாழ்வு பெற வேண்டும் என்ற கழகத்தின் குறிக்கோளுக்கு, வீட்டை மறந்தாலும் நாட்டை மறக்காத நல்லவர்கள் ஆதரவு தருகிறார்கள்! அரசியல் மேதைகளும் மொழி ஆராய்ச்சிக்காரர்களும், கழகத்தின் சீரிய பணியைப் பாராட்டுகின்றனர். ஆனால் வெளியிலேயிருந்து அண்மையில் தென்னகம் புகுந்திருக்கும் "தயாரிக்கப்பட்ட தலைவர்" இந்திரா தேவியார் முன்னேற்றக் கழகத்தைத் தன் தாக்குதலுக்குப் பிரதான குறியாக வைத்துக் கொண்டுள்ளார். அம்மையார் அகலாபாத் விருதுடன் அகிலம் சுற்றியவர்; அரசியல் விடுதலைச் செய்திகளை அதிகமாகக் கேட்டறிந்தவர்; ஏனோ அலறித் துடித்திருக்கிறார் உதகையில்; காரைக்காலில்; பாண்டிச்சேரிப்பகுதிகளில்! கழகத்தின் வெற்றிகளும் வளர்ச்சியும் இங்கேயுள்ள தேர்... வீரர்களுக்கு, விருதுநகர்க் கோமான்களுக்கு எரிச்சலைத் தருவது போலவே அகில இந்தியத் தலைவிக்கு, புதிய **பாரதமாதாவுக்குப்** பயம் தந்துள்ளது! முடிசூட்டிய சில நாட்களிலேயே அவர் முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து முரசு கொட்டுகிறார். முடிசூடாத மன்னன் முக்காடு போட்டுக்கொண்டு கொல்லைப்புற வழிகளிலே ஓடி மண்டபத்துக்குள்ளே ஒளிந்துகொண்ட காரணம் முன்னேற்றக் கழகம் என்பது காமராஜ் சிபார்சு பெற்றுத் தலைவியான தங்கத் தாமரை - "அன்னிபெசண்ட் அம்மையாருக்குத்" தெரியாது

ஏமாந்த ரோமியோக்கள்!

பிரஞ்சுப் பட்டினம் ஒன்றின் உணவு விடுதிக்குள் நுழைந்தனர் சில அமெரிக்க மாலுமிகள். தங்களிடமிருந்த மஞ்சள் நிறப் பொடி ஒன்றை அவர்கள் மிகவும் சுவைத்து உண்டனர். அதைப் பார்த்த பிரஞ்சுக்காரன் ஒருவன் வியந்தான். மறுநாளும் அவர்கள் அவ்வுணவு விடுதிக்கு வந்தனர். அவர்களுள் ஒரு மாலுமியை அந்தப் பிரஞ்சுக்காரன் அணுகிக் கேட்டான்: "நேற்று மாலை நீங்கள் உண்ட மஞ்சள் பொடி என்ன?"

மாலுமி சற்றுத் தடுமாறி, பின் அரைச் சிரிப்புடன் சொன்னான்: "அது ஒரு காதல் மருந்து. வட ஆப்பிரிக்கத் துறைமுகம் ஒன்றில் ஒரு நீக்ரோவிடம் எட்டு டாலர் விலைக்கு வாங்கினேம். எனக்கு எந்தக் காதலியும் கிடையாது. இதை உண்டால் இரண்டு நாட்களுள் அழகான காதலி கிடைப்பாள் என்று அந்த நீக்ரோ சொன்னான். அவளை என்னிடம் மயங்கி விழ வைக்கும் 'அற்புதக் காதல் மருந்து இது' என்றான் அவன். நேற்று உண்டேன். இன்று இரண்டாவது நாள்..."

அவ்வுணவு விடுதி காவல்காரனான அந்த பிரஞ்சுக்காரன் அவர்களிடம் மீதி இருந்த அந்தப் பொடியில் கொஞ்சம் வாங்கி மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பினான். அப்போதுதான் தெரிந்தது அது வெறும் பால் சாக்லட் பவுடர் என்பது. அத்தோடு பிரான்சிலோ, அமெரிக்காவிலோ அதன் விலை நான்கே டாலர்தான். நீக்ரோ செய்ததெல்லாம் அந்தப் பவுடரில் சிறிது செண்டை கலந்ததுதான். அதையும் வாங்கித் தின்றுவிட்டு, காதல் பெண்ணின் கையைப் பிடிப்பதற்குக் காத்திருக்கின்றனர் அந்த ஆசாமிகள். அந்தோ, அமெரிக்க ஏமாளி ரோமியோக்களே!

சிலப்பதிகாரத்தில் நாகரிகக்கலப்பு!

டாக்டர் அ. சிதம்பரநாதன்

பழந் தமிழகத்தில் கணவன் இறந்த பிற்பாடு மனைவி ஆற்றிற்குச்சென்று நீராடி அடுத்த பிறவியில் அதே கணவனை மீண்டும் அடைதற்கு நோற்றுக்கொண்டு இருந்த வழக்கம் இல்லை. இம்மாதிரியான வழக்கம் தமிழகத்தில் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளையொட்டிய காலத்தில்தான் தலைப்படலாயிற்று. பண்டையத் தமிழகத்தில், அதாவது, இரண்டாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தில், ஆற்றிலோ குளத்திலோ மூழ்குவதால் இழந்த கணவனை மறு பிறப்பில் அடையலாம் என்று மகளிர் நம்பினார்கள் இல்லைபோலும் என ஊகித்தற்கு இடமுண்டு. சிலப்பதிகார காலமாகிய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னும், இன்றிலிருந்து ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னும் ஆற்றில் நீராடி நோற்பதால் இழந்த கணவனை மீ டும் பெறலாம் என்ற குருட்டு நம்பிக்கை பிறக்கலாயிற்று. எனவே, சிலப்பதிகாரம் இவ்விரு வேறு கருத்துக்களும் ஒன்றோடொன்று தாக்குதலைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. பிரிந்துள்ள கணவனைத் திரும்பவும் பெறுதற்கு [...]ருவது போதும் என்ற நம்பிக்கை கொண்டவளாய்த் தேவந்திகை கண்ணகிக்கு அறிவுறுத்தவும், கண்ணகி அவ்வறிவு தனக்கு வேண்டாமென மறுத்துவிட்டாள் என்பது முன்னர்க் காட்டப்பட்டது. கண்ணகி தன் கணவன் இறந்த பிற்பாடு அடுத்த பிறவியில் அவனை அடையலாம் என்ற நம்பிக்கையில் உயிர்வாழ்ந்து, ஊர்தொறும் உள்ள நீர்த்துறைகளிற் படிந்து நோற்றுக் கொண்டு இருத்தல் கூடும். ஆனால், அவ்வாறு செய்யமாட்டேன் என்று கூறும் திடமொடு அவள் இருந்தாள் என்பதே சிலப்பதிகாரம் காட்டுவது. அவள் கணவன் இறந்தான் என்ற செய்தியைக் கேட்டுப் பொங்கியெழுந்து விழுந்து அழுது மாழ்கினாள். அது "துன்ப மாலை" என்னும் காதையால் அறியப்படுவது. அவ்வாறு ஏங்கிக் கொண்டிருந்த கண்ணகி, "அரசனால் என் கணவன் கொல்லப்படவும், நான் மற்ற பெண்டிரைப் போல நீர்த்துறைகள் பலவற்றில் மூழ்கி மூழ்கி எழுந்து நோற்றுக் கொண்டு இருப்பேனா?" என்று கேட்டாள். இதனை இளங்கோ அடிகள் அடியிற் காணுமாறு அமைத்துள்ளார்:

"நறைமலி வியன்மார்பின்
நண்பனை இழந்தேங்கித்
துறைபல திறமூழ்கித்
துயருறு மகளிரைப்போல்
மறனொடு திரியுங்கோல்
மன்னவன் தவறிழைப்ப
அறனெனும் மடவோய்யான்
அவலங்கொண்டு
அழிவலோ!"

தன் கணவனாகிய நண்பனை இழந்து ஏங்கிக்கொண்டு பல நீர்த்துறைகளில் ஆடித் தன் வருத்தத்தை மற்ற மகளிரைப்போல் காட்டிக் கொண்டு இருக்கப் போவதில்லை என்று துணிவோடு கண்ணகி கூறினாள் என்பது இப்பகுதியால் அறியப்படுகிறது. தன் கணவன் கோவலனை நாயகனாக அன்றியும் நண்பனாகவும் மதித்தாள் என்பது இப்பகுதியால் தெரியவருகிறது. மன்னவன் கோல்கோடிக் கணவனைக் கொல்லும் அளவிற்குப் பார்த்துக்கொண்டிருந்த அறக்கடவுள் எனப்படுவோனை "அறிவற்றவனே" என உரம்படைத்த நெஞ்சோடு பேசக்கூடிய கண்ணகியால்தான் இவ்வளவு துணிவாகத் தன் கருத்தினை எடுத்துக் கூறுதல் இயலும். கண்ணகியோடு ஒத்த காலத்தில் வாழ்ந்த விதவை மகளிர் சிலர் செய்துவந்த போலிச்சடங்காகிய நதிதீர வழிபாட்டில்நம்பிக்கை இல்லையென்று திண்ணமாக எடுத்து அறைந்த கண்ணகியின் திறம் நினைவுகூரத் தக்கது.

பழந்தமிழகத்தில் வாழ்ந்த மக்கள் ஆற்றிலும் குளத்திலும் நீராடினாரேனும், அந்நீராட்டு அவர் உடம்பில் உள்ள அழுக்கைப் போக்குதற்காக என்று அமைந்திருந்தது. அந்தக் காலத் தமிழ்மக்கள் கடலில் நீராடி மகிழ்வது உண்டு. உடம்பிலுள்ள மாசு நீங்க நீர்நிலைகளில் துள்ளிக் குதித்து விளையாடுவது உண்டு. ஆழமான ஆறுகளிற் குடைந்து குடைந்து ஆடுவதுண்டு. ஆழமான பள்ளங்களில் உள்ள அடிமண்ணை எடுத்து வெளிவந்து காட்டி மகிழ்வதுண்டு. ஆயினும், நீராடுதல் புண்ணியம் என்றோ, புனிதம் என்றோ, சமய சடங்குகளில் ஒன்று என்றோ அக்கால மக்கள் மதித்திலர். அவர்கள் வழிவந்த கண்ணகிக்கு அத்தகைய நல்லுணர்ச்சி இருந்தது என்பதை இளங்கோ அடிகள் இலைமறை காய் போல் இங்கு அமைத்துள்ளார். வேறு நாகரிகத்தின் அடிப்படையில் வளர்ந்த மகளிர் செய்ததைப் போன்றோ, அந்நாகரிகத்திற் சிக்குண்ட தமிழக மகளிர் சிலர் கண்ணகி காலத்திலேயே செய்து கொண்டு இருந்ததைப் போன்றோ தான் செய்யப்போவதில்லை என்ற உறுதியோடு கண்ணகி இருந்தாள் என்பது நுட்பமாக இளங்கோ அடிகளால் தீட்டப்பட்டுள்ளது. அதனால்தான், "துறை பல திறம் மூழ்கித் துயறுரும் மகளிரைப்போல், நான் அவலங்கொண்டு அழிந்துகொண்டு இருப்பேனோ?" என்று கண்ணகி கூறினதாக இளங்கோ அடிகள் வரைந்துள்ளார்.

சிலப்பதிகாரத்தில் மாடலன் என்ற மறையவன் ஒருவன் அடிக்கடி பேசப்படுகிறான். அவன் சீர்காழி வட்டத்தைச் சேர்ந்த ஓர் ஊரிற் பிறந்தவன். தான் முன்னர்ச் செய்த தீவினை ஏதோ ஒன்றைப் போக்கிக் கொள்ள அவன் குமரி எல்லையிற் போய் நீராடித் திரும்பி வந்தான் என்பது அடைக்கலக் காதையால் அறியப்படுகிறது. அவன் பிறகு செய்த மற்றொரு பாவத்தைப் போக்க வடதிசையில் உள்ள கங்கையில் நீராடப்போயினான் என்பது நீர்ப்படைக் காதையால தெளிவாகத் தெரிகிறது. சேரன் செங்குட்டுவன் தமிழரைப் பழித்த வட புலத்து வேந்தர்களைத் துகளாக்கி வெற்றி கொண்டாடிக்கொண்டிருந்த நேரத்தில், மாடலன் அவனைக் கங்கையாற்றின் கரையிற் சந்தித்தான் என்றும், அவன் சேர மன்னனுக்குச் சில சொற்கள் உரைத்தான் என்றும் அறிகிறோம். மாடல மறையவன் செங்குட்டுவனை நோக்கி, "மடந்தை மாதவி இயற்றிய கானற்பாணி கனக விசயர்களுடைய முடித்தலை நெரித்தது" என்று கூறினான். அதாவது, கோவலனால் விரும்பப்பட்ட கணிகை மாதவி புகார் நகரத்துக் கடற்கரையில் எழுப்பிய காதற்பாட்டு ஒன்று கோவலனைப் பிணங்க வைத்தது என்றும், மாதவி
யிடம் [...]
கொண்ட [...]
தால் [...]
திரும்பவும் [...]
பால் [...]
பேரன்பு பூ[...]
என்றும், [...]
யில் அவ[...]
ரைக்குச் [...]
வேளையில் [...]
கொல் [...]
பொய்க் [...]
ஏற்றப்பட[...]
கொல்லப்பட[...]
என்றும், கண[...]
இழந்த [...]
கலக்கத்தோடு அரசன் முன்[...]
முறை கேட்டாள் என்றும்[...]
பின் வஞ்சிநாட்டு எல்லையு[...]
புகுந்து மறைந்து போயின[...]
தால் அவளுக்கு வழிபாடு [...]
செங்குட்டுவன் மனைவி [...]
என்றும், அக்காரண[...]
கண்ணகிக்கு உரிய [...]
சமைத்து வழிபாடு செய்வத[...]
யத்திலிருந்து கல் எடுத்து [...]
வருதற்குச் செங்குட்டுவன்[...]
டான் என்றும், அக்கல்லி[...]
புலவேந்தர் கனகவிசயர் [...]
சுமத்திக் கொணர்வித்தான்[...]
உள்ள செய்திகள் அனை[...]
தொகுத்து, மாடலன்

"வாழ்க எங்கோ
மாதவி மடந்தை
கானற்பாணி
கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது"

என்று குறிப்பாக மொ[...]
இதனைக் கேட்ட செங்[...]
னுக்குக் கோபம் பிறந்தது [...]
தானே? தன்னுடைய வீர[...]
அடிபணிய வைத்துக் கனக[...]
களுடைய முடித்தலையில் க[...]
கிக்கு உரிய கல்லைத் தான் கொ[...]
வந்து இருப்பவும், தன்னைப் [...]
டாமல் மாதவியினுடைய [...]
பாணி காரணம் என்று மா[...]
கூறுகிறானே என அவன் [...]
வெகுள நினைத்தது இயல்பு[...]
அதனால், "பகைவர்கள்கூட[...]
லுதற்கு அஞ்சக்கூடிய [...]
நீ எவ்வாறு சொன்னாய்[...]
செங்குட்டுவன் மாடல[...]
பொழுது, தன் கூற்றினை [...]
முகத்தால் சில சொற்களை அ[...]
யவன் கூறினான். அக்கூ[...]
தென்படுகின்ற கருத்தே [...]
ஆராய்ச்சிக்கு உரியது. "[...]
நகரத்தில் கடல் விளையாட்டு [...]
தில் மாதவி பாடிய பாட்டு[...]
றால் கோவலன் ஊடிக் கூ[...]
பிரிந்து குலக்கொடி கண்[...]
யுடன் மதுரைக்கு ஏகி[...]
மதுரையில் தவறு இழைத்த ம[...]
வன் மடிந்தான். கொலைப்[...]
கோவலன் மனைவி உனது நாட[...]
புகுந்ததால் வடதிசை மன்னருன[...]
மணிமுடியில் இன்று ஏறி வந்[...]
ளாள்" என அவன் கூறிய விளக்[...]
தோடு ஒட்டிய சொற்களே இ[...]
இப்போது வேண்டுவன [...]
மன்னனை நோக்கி, "நான் இ[...]
பக்கம் வருவதற்கு ஏற்பட்[...]
காரணத்தைக் கேட்பாயாக. பாண்[...]
நாட்டில் அமைந்த பொதிய[...]
மலையைச் சுற்றிக் குமரியம் பெ[...]
துறையில் நீராடி மீண்டுகொண்[...]
இருந்தேனாகிய நான் என் தீவினை[...]
பயனால் போலும் மதுரைக்குச் செ[...]
றேன். அப்படி மதுரைக்குச் சென்[...]
தால்தான் எனக்குச் சில தீங்கு[...]
உண்டாயின. மதுரைக்கு நா[...]
செல்லவில்லையென்றால் இப்போ[...]

— 10-ம் பக்கம் —

எது கடவுள்!

உலகுள பொருள்க ளுள்ளே உயிருள துயர்ந்த தாகும்.
பலவுயிர்ப் பொருள்க ளுள்ளே பண்புளோன் மனித னவான்.
நலமளிபண்பை ஆய்ந்தால் நற்பகுத் தறிவே யாகும்.
அலகிலா துயர்ந்த வுள்ளம் ஆண்டவன் என்ப தாகும்.
உளத்திலங் குணர்வி னுள்ளே உயர்ந்ததாம் நல்ல தொன்றே.
வளத்தினை மாய்க்கப் பார்க்கும் மறைந்துறை தீது மொன்றே.
குளத்திலே கல்லைப் போட்டால் கொதித்தெழும் அலைகள் போலே
உளத்திலே ஒன்றை எண்ணின் உணர்வுகள் மோதி யார்க்கும்!

இறையனார் அமர்தற் கேற்ற இன்மலர் இருக்கை என்றும்,
உறைவதற் கேற்ற தூய ஒப்பிலாக் கோவில் என்றும்,
மறையவர் மனத்தைப் பற்றி மாணவும் புகழ்வ தாலே
அறைவதில் தவறோ தெய்வம் ஆர்க்குமுள் ளுணர்வாம் என்றே?...
உண்மையைக் காணற் காக உலகுள நாட்க ளெல்லாம்
திண்ணறிதின் உய்த்த காந்தி சிறந்ததோர் இயல்பைக் கண்டார்:
"எண்ணரும் செம்மை யெல்லாம் இயைந்ததாய் இலங்கு கின்ற
'உண்மை'யே அல்லால் வேறே உள்ளதோர் இறைவ னில்லை."

—கீரன்.